பரமனேசரணம்.

—o—

தத்துவபோதினி.

மூன்றுவதுபுத்தகம்.



இஃது,

வேதஸமாஜத்தாரால்

இயற்றப்பட்டு,

தத்துவபோதினி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னைநகர்

கலியுகாதி - ௪௯௬௯

விஷய அட்டவணை.

—0)※(0—

தத்துவபோதினி—௩, ௩௦, ௪௯, ௬௪, ௮௪, ௧௦௨, ௧௨௨, ௧௪௧, ௧௫௯, ௧௯௩, [௧௯௮ ௨௦௮.

கடிதக்குறிப்பு—௧௨௯, ௧௭௭, ௧௯௫.

சந்தேகவிளக்கம்—௧௨௭.

மிஸ்கார்பெண்டர்—௧௩௬.

விக்கியாபனம்—௧௭௭.

கடவுள்துதி—௧, ௨௭, ௪௩, ௬௧, ௮௧, ௧௦௦, ௧௧௯, ௧௩௯, ௧௫௭, ௧௭௫, [௧௯௧, ௨௦௭.

ஆண்டுநிறைவு—௨௬.

இரக்ஷணார்த்தம்—௮௦.

சமாஜத்தில்—௯௯.

செல்வத்தில்—௬௦.

தேவகாயத்திரிபொருள்—௧௧௮.

தைரியத்தின்பொருட்டு—௮௦.

வறுமையில்—௬௦.

மொழிபெயர்ப்பு—

இருக்குவேத ஸம்ஹிதை—௭, ௩௨.

உபநிஷத்து.

தைத்தரீய—௧௦, ௩௩, ௪௯, ௭௦, ௮௮, ௧௩௪, ௧௪௬, ௧௬௨, ௧௮௦, ௧௯௮.

கல்கத்தா பிராம்ஹஸமாஜத்தின் - ௩௭ - வது வருஷோத்ஸவம்—௨௧௪.

பகவத்கீதை—௯, ௪௦, ௪௮, ௬௯, ௮௭.

பிராம்மதருமம்—௭௫, ௯௧, ௧௦௫, ௧௩௩, ௧௪௫, ௧௭௯, ௧௯௭.

பேகன்வியாசம்—௧௧, ௩௪, ௫௨, ௭௧, ௧௩௪, ௧௪௬.

மனுநூல்—௧௨, ௩௫, ௫௦, ௭௨, ௮௯, ௧௩௧, ௧௪௩, ௧௬௧, ௧௭௮, ௧௯௬ [௨௦௯.

மாதிருவாச்சலியம்—௧௪, ௫௧, ௭௩, ௯௦, ௧௦௭, ௧௩௫.

மாலேதாரகை—௧௫௫.

மிஸ்கார்பெண்டர்—௧௫௪.

வேளாண்மை—௧0௬, ௧௨௯, ௧௪௨, ௧௬0.

சென்னை பரப்ரஹ்மோபாஸனசபை உபந்நியாஸம்—௧௬, ௧௪௭, ௧௬௨, ௧௮௧,
[௧௯௮, ௨௧0.

திருபம்—௧௪, ௨௧, ௨௬, ௪௧, ௫௮, ௫௯ ௧௩௬, ௧௫௩, ௧௫௫, ௧௭௧, ௧௮௯,
[௨0௪, ௨0[illegible], ௨௧௯.

அய்யாசாமிமுதலியார். (பெங்குளூர்.)—௨0, ௭௮, ௯௮, ௧௧௨, ௧௩௮, ௧௫௨.

உடுமலைப்பேட்டை வேதஸமாஜம்—௩௬, ௫௫.

கூடலூர் பரப்ரஹ்மஜனை—௧௮௪.

சேலம்வேதஸமாஜம்—௨௫.

தஞ்சை தருமசபை—௧௬௬, ௨0௨, ௨௧௬.

தஞ்சைபிரமசபை—௯௫, ௧௭௩.

நாராயணஸாமி நாயகர். (வே)—௭௬, ௭௮, ௧௧௪, ௧௧௫, ௧௧௭, ௧௩௭, ௧௯0,
[௨௨0.

பட்டுகோட்டைபிரமஸபை—௧௬௯, ௧௭௨, ௨0௧, ௨௧௨.

பெங்குளூர்வேதஸமாஜம்—௧௩௬, ௧௫௨, ௧௮௮, ௨௨௨.

இதரநூல்களிலெடுத்தது—

அமிருதவசனி—

அறஞ்செய்தலைப்பற்றி—௯௩.

இராக்ஷதர்—௧0௮.

பதிவிரதாதருமம்—௫௩.

பிறர்க்குபயன்படுதல்—௭௫.

தத்துவபோதினி.

பு. ங.] சென்னைப்பட்டணம் கஅசுசு௵ மேமீ எஉ. [இல. க.

ஏகமேவாத்விதீயம், ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம, ஶாந்தம் ஶிவமத்வைதம், யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே, யேந ஜாதாநி ஜீவந்தி, யத்ப்ரயந்த்யபிஸம்விஶந்தி.

ஸத்யமேவ ஜயதே நாந்ருதம்.

அட்டவணை.

விஷயங்கள்.

	பக்கம்.
க. கடவுள்துதி	க
உ. விளம்பரங்கள்	உ
ங. தத்துவபோதினி	ங
ச. ருக்குவேதசம்ஹிதை	எ
ரு. பகவத்கீதை	கூ
சு. உபநிஷத்து	க0
எ. பேகன்வியாசம்	கக
அ. மநுநூல்	கஉ
கூ. மொழிபெயர்ப்பு	கச
நிருபங்கள்.	
க0. சென்னை வேதசமாஜம்	கச
கக. உபந்நியாசம்	கசு
கஉ. நிருபம்	உ0
கங. ஞானமார்க்கம்	உக
கச. சந்தாதாரர் அட்டவணை	உச
கரு. சேலம்வேதசமாஜவிண்ணப்பம்	உரு
கசு. புனர்விவாக விளம்பரம்	உசு
கஎ. ஆண்டுநிறைவு	உசு

சத்தியமே சக்தி—தத்துவமே சித்தி.

கடவுள்துதி.

அண்டபகிரண்டமும் மாயாவிகாரமே
அம்மாயை யில்லாமையே
ஆமெனவுமறிவுமுண் டப்பாலுமறிகின்ற
அறிவினை யறிந்துபார்க்கில்
எண்டிசைவிளக்குமொரு தெய்வவருளல்லாமல்
இல்லையெனு நினைவுமுண்டிங்
கியானெனதறத்துரிய நிறைவாகிநிற்பதே
இன்பமெனு மன்புமுண்டு

கண்டனவெலாமல்ல வென்றுகண்டனைசெய்து
சருவி கரணங்களோயக்
கண்மூடியொருகண மிருக்கவென்றூற்பாழ்த்த
கர்மங்கள் போராடுதே
பண்டையுளகர்மமே கர்த்தாவெனும்பெயர்
பக்ஷநா னிச்சிப்பனோ
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே.

விளம்பரம்.

இந்தச் சென்னைத் தத்துவபோதினியை வாங்க மனமுடையவர்கள் மயிலாப்பூரில் தத்துவபோதினி அச்சுக்கூடத்தில் வேதஸமாஜத்தின் காரியதர்சியாகிய-பா. சுப்பராயலு செட்டியார், பி. ஏ. பி. எல். அவர்களுக்கு எழுத்துமூலமாய்த் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

இதற்குச் சந்தாவிவரம்.

சென்னைப்பட்டணத்தி லுள்ளவர்கள் வருஷம் ஒன்றுக்கு ரூபாய்.......................க - அ - 0

அதற்கு வெளியிலுள்ளவர் தபால் கூலியுடன் சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய். உ - 0 - 0

பத்துப்பிரதிகளுக்கு அதிகமாய் வாங்கும் வெளியிலுள்ளவர்கள் தபால்கூலியுடன்சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய்..................க - கஉ - 0

இதற்குச் சந்தாதார்கள்தங்கள்சந்தாக்களை யந்தந்த வருஷத்தில் முன்பணமாய்க் கட்டவேண்டியது. மேமாசத்துக்கு மேமாசம் இதற்கு வருஷமாய்க்கொள்ள வேண்டியது. வருஷம் நடுவில் வாங்கத் தொடங்குவோர்க்குச் சந்தாவீதம் - அ- அணா உயர்த்தப்படும்.

வெளியிலிருந்துசந்தா அனுப்பவேண்டியவர்கள் தபால் முத்திரைகளனுப்பலாம். ஆனால், அப்படி யனுப்பப்படும் முத்திரைகளை மாற்றுவதர்க்காக,ரூபாய் ஒன்றுக்கு - ஒரு அணா வீதம்-வட்டம்சேர்த்து அனுப்பவேண்டியது.

இந்தப் பத்திரிகையின் சந்தாதாரர்களும், பங்குக்காரர்களும், இடம் மாரும் போது அந்தவிவரத்தைத் தயைசெய்து காரியதர்சிக்குத் தெரிவிக்கவேண்டியது.

புஸ்தகவிளம்பரம்.

கிரந்தத்திலும், தமிழிலும் இயற்றப்பட்டபாலவியாகரணம். 0 - ச - 0

தபால்கூலி............ 0 - க - 0

தெலுங்கு பாலவியாகரணம்... 0 - ச - 0

தபால்கூலி............ 0 - க - 0

வேதஸ்மாஜத்தார் முதல் விண்ணப்பம் விக்கிரஹ ஆராதனத்தைக்குறித்தது நன்றாய் பயிண்டுசெய்தது,............. 0 - அ - 0

தபால்கூலி............ 0 - உ - 0

ஷை மட்டப்பயிண்டுள்ளது..... 0 - எ - 0

தபால்கூலி............ 0 - உ - 0

வேத சமாஜத்தார் இரண்டாவ

து விண்ணப்பம் பெண்கள் கல்வியைக்குறித்தது........0 - அ - 0

தபால்கூலி........... 0 - உ - 0

தமிழிலஸ்தோத்திரபாடம்பிரதி 0 - க - 0

தபால்கூலி........... 0 - க - 0

௧௮௬௫ௐ மேமாசம் முதல் ௧௮௬௬ௐ ஏப்பிரல்மீ வரையிலுள்ள தத்துவபோதினி பயிண்டுசெய்தது. ...... ௯ - 0 - 0

தபால்கூலி.......... 0 - ச - 0

வெளியிலுள்ளவர்கள் புஸ்தகம் ஒவ்வொன்றுக்கும் குறித்த தபால்கூலி சேர்த்தனுப்பவேண்டியது.

நிருபக்காரருக்கு விளம்பரம்.

இந்தப்பத்திரிகையில் பிரசுரமாகும்படி தயைசெய்து நிருபமெழுதியனுப்பும் கனவான்கள், அதுபிரசுரமாக வேண்டியதற்கு முன்மாதமே, உ0வ க்குள்ளாக அந்த நிருபங்கள் எங்களிடம் சேரும்படி அனுப்புவார்களாகில் வெகு உபகாரமாக விருக்கும்.

அப்படி யனுப்பப்படும் நிருபங்களில் நிருபக்காரருடைய இருப்பிடமும் கையெழுத்துமில்லாதபக்ஷத்தில் அவைகளை ப்பிரசுரப்படுத்துவது சாத்தியமா யிருக்கமாட்டாது.

எங்கள்கொள்கைகளை ஆக்ஷேபித்தெழுதினல் நாங்கள் பிரசுரம்செய்யமாட்டோமென்கிற கருத்தினலே நிருபமெழுத மனமுடைய பலர் எழுதாமலிருப்பதாய் நாங்கள் கேள்விப்படுகிறோம். உண்மை வெளியாகவேண்டியதே எங்கள்கருத்தாகையால், எங்கள் கக்ஷிகளை யாக்ஷேபித்தெழுதப்படும் நிருபங்களை நாங்களிதில் பிரசுரஞ்செய்வது மாத்திரமேயன்றி, பழுதானவையாய்த் தோன்றும் ஆக்ஷேபங்களுக்கு எங்களாலியன்றவரையில் சமாதானம் சொல்லவும் சரியான ஆக்ஷேபங்களை ஒத்துக்கொள்ளவும் சித்தமாயிருக்கிறோம்.

விஷயங்களின் மேலுள்ள குணதோஷங்களை யெவ்வளவெடுத்துச் சொன்னுலும் எங்களுக்குச் சம்மதமே யாகிலும், வியக்தி தூஷணங்களடங்கிய நிருபங்களை இதில் பிரசுரப்படுத்த இயலாதாகையால் அதற்காக மன்னிக்கக்கோருகிறோம்.

கடைசியாக உண்மைவெளியாகி நன்மைபரவவேண்டுமென நாங்கள் முயலுகிறவாறே நிருபக்காரரும் பரிசுத்த சிந்தையுடன் தங்கள் கருத்துகளை வெளியிடுவார்களென்று நம்புகிறோம்.

தத்துவபோதினி.

சோதரர்காள!

நமதுபத்திரிகையில் பெரும்பாலும் வைதிகவிஷயங்களைப்பற்றிச் சொல்லுவதோடும், இவ்விராஜதானியில் நடக்கும் முக்கியமான வர்த்தமானங்களையும் கூடியவரையில் சங்கிரகித்து அச்சிட்டால்பலருக்குபயோகமா யிருக்குமென்று நமதுசந்தாதாரர்களும், சினேகிதர்களும் எழுதிக்கொண்டிருக்கின்றனர். தத்துவவிசாரணைசெய்வதே நமது பத்திரிகையின் முக்கியஉத்தேசியமாயினும், இதைத்தொடங்குங்கால் சிலவர்த்தமானங்களையும் குறிப்பதாகநமது கருத்தை வெளியிட்டிருந்தோமல்லவா? அவ்வாறே சிலபத்திரிகைகளிலும் முக்கியமானசங்கதிகளைப் பிரசுரப்படுத்தியும் வந்தோம். அன்றியும் பின்னிட்டு எங்கள் முக்கியஉத்தேசியத்தைச்சார்ந்த பலதொல்லைகள் மேலிட்டபடியாலும், அதனுல் அவகாசமில்லாமற்போனதாலும் இவ்விஷயத்தை அலக்ஷியஞ்செய்துவிட்டோம். ஆயினும் இனி அப்படிசெய்யாமல், நமதன்பர்களைத்திருப்திசெய்ய முயல்வோம்.

இப்பொழுதுசென்னையில்முக்கியமாய் பிரஸ்தாபிக்கப்படும் சங்கதி யாதெனில்

சென்னைமுனிசிபல் ஆக்டுஎன்னுஞ்சட்ட
த்தின்கொடுமையன்றிவேறுமுக்கியமான
தொன்றுங்காணப்படவில்லை. இச்சென்
னையிலும்இதைச்சார்ந்த பலகிராமங்களி
லும் சட்டிபானையகப்படாமல் ஜனங்கள்
சிலநாளாகமிகவருத்தமடைகின்றனர். க
ல்லியாணச்சடங்குகளின்பொருட்டுமொ
ருபானையகப்படுவது அசாத்தியமாகி எ
ளியஜனங்களெங்கும் ஏக்கமுற்றிருக்கின்
றனர். எவ்விடத்திலும்முனுசிபல் கமிஷ
னர்களுடையபிரபாவமே எவர்வாயிலும்
கோஷிக்கப்படுகின்றது. இதற்குக்காரணம்
யாதென்றுவிசாரிக்கையில், மேற்குறித்தக
ம்மிஷனர்கள் முக்கியமாய் சுதேசகமிஷ
னரது பிரேரேபணையால் குயவர்களுக்கு
அவர்சக்திக்கிசையாத விசேஷவரி போ
ட்டதாயும் அக்குயவர்கள்அவர்களுடை
ய வருத்தத்தைச்சொல்லி மேலானஅதி
காரிகளிடத்தில் முறையிட்டுக் கொண்டு
ம் யாதொரு பரிகாரமும் கிடையாமற்
போகவே, மதிமயங்கி, தமதுதொழிலைவி
டத்துணிந்தோராகி, சட்டிபானை யினி
யொருவருக்கும் விற்கலாகாதெனக்கட்டு
பாடுசெய்துகொண்டார்களென கேள்வி
ப்பட்டோம். இதனால் சட்டிபானை கி
டையாமல் வருந்திய யாவரும் கமிஷனர்
களைத் தூஷிக்கவாரம்பித்தனர். இவ்வளவு
சங்கடங்களைவிளைக்கும் இத்தொழில்வரி
யைப்பற்றி இங்கு சிலவார்த்தகளைச்சொ
ல்வ தவசியமென்று நினைக்கிறேம்,

கவர்ணமெண்டாரால் நாமடையும் சுக
த்தையும் காப்பையும் நோக்கி நாமவர்க
ளுக்குத்திரிவியசகாயஞ் செய்யவேண்டி
யது நமதுகடமையே. சற்று ஆழமாயோ
சிப்போமாயின் ஒவ்வொருராஜியமும் கு
டிகளாலாயதன்றி வேறல்ல. குடிகளு
டைய தேஹத்துக்கும், திரிவியத்துக்
கும், அவர்களுடைய சுகஜீவனத்துக்கு
ம், எனையோரால் ஹானிவராமல் காக்
கும்பொருட்டே சகல இராஜாங்கங்களு
ம் ஏற்படுகின்றன. கள்ளர், வஞ்சகர் ச
த்துருக்கள் முதலியபேரால் நமக்கு து
ன்பம் வராமலிருக்கும் பொருட்டே யல்
லவா போலீஸ் முதலிய ஏற்பாடுகளும்
நீதிஸ்தலங்களும் ஏற்பட்டிருக்கின்றன.
நமது அமைதிக்கு இதரதேசத்தாரால்
அழிவுநேரிடாமலிருக்கும் பொருட்டல்
லவா, அளவற்ற சேனைகள் யுத்தபயற்
சியோடு காக்கப்படுகின்றன. இவைகளை
யெல்லாஞ் சீர்படுத்தியாளும்படி யன்
றோ மேல்விசாரணைகர்த்தராகிய கவரன்
மெண்டும் ஏற்படுகின்றது. ஆகையால்ந
மது சுகத்தின்பொருட்டாகிய இவ்வேற்
பாட்டுகளைப்போஷிக்கவேண்டிய செலவு
நம்மைச்சார்ந்ததேயன்றி வேறல்ல. இச்
செலவிற்காகவே கவரன்மெண்டார் குடி
களிடத்தில் பலவித வரிவாங்கவேண்டிய
யதும், குடிகளும் சந்தோஷமாய் கொடு
க்கவேண்டியதும். ஆயினும்குடிகளுடை
ய சௌக்கியமே முக்கியஉத்தேசியமாயி
ருத்தலால் நிஷ்பக்ஷபாதமாய், எளியோ
ர் தனவான்கள் முதலிய சகலஜனங்களு
க்கும் அவரவர்சக்திக்கும் அந்தஸ்துக்கு
ம்தக்கபடி வரி ஏற்படுத்துவதும், அப்படி
ப்பட்ட வரியைஒருவருக்கும் சங்கடமு
ண்டாகாமல் வசூல்செய்வதும் கவரன்
மெண்டார் கடமையாயிருக்கின்றது.

வரிவாங்கவேண்டிய கிரமத்தையும் த
குதியையும் மேற்குறித்தவாறு யோசிக்
குங்கால், ஒவ்வொருவருடைய ஆஸ்திக்
கும் அந்தஸ்துக்கும், தக்கபடி வரிவாங்
கவேண்டுமென்பதுவிசிதமாகும். இலக்ஷ
ம்ரூபாய் காக்கவேண்டியவனும், ஒன்று
ம் காக்கவேண்டாத எளியகுடியானவனு
ம் ஒரேவிதவரிகொடுப்பதென்றால் அநீதி
யாகும். அன்றியும் இம்முனிசிபல் ஆக்
டில்குறித்ததொழில்வரியை சற்றுயோசி
க்குமிடத்து இதைவிட நீதியுடையதாக
தோற்றவில்லை. தொழில் வரியின் தன்
மை வரிகளேற்படும் ஒருசித்தாந்தத்துக்
கும் ஏற்றதாயிருக்கவில்லை. ஒவ்வொரு
தலைக்கட்டுக்கும்வருஷம், இத்தனைஅணா
என்று பொடப்படுமாயின் அது எளி
யோர்க்கும்திரிவியவான்களுக்கும் சமமா
ன பாரத்தையுண்டாக்கும்.. ஒவ்வொருத
லையும் காக்கப்படவேண்டுமாதலால், ஒவ்
வொருதலையும்சமமான பாரத்தைத்தான்
சுமக்கவேண்டுமென சொல்லப்படலாம்.
ஆயினும் இதுபிசகென்பது எளிதில்விள
ங்கும். பிரதிமாதமும், ஆயிரம்இரண்டா

யிரம்சம்பாதிக்கும்பெரும் வர்தகனுடையதலையும், பிரதிதினமும் பிச்சையெடுத்துவயிர்வளர்ப்பவனுடையதலையும், ஒரேமதிப்புள்ளனவென்றுவொருவருஞ்சொல்லத்துணியார். பிச்சைக்காரன் தலையைப் பராமரிப்போர் ஒருவருமில்லாதிருந்தும், வர்த்தகன்தலை கொண்டுபோக பதினாயிரம்பேர் பதுங்கியிருப்பார். மேலும்வரிபோடுவதுதலைகாக்கமாத்திரமன்று; திரிவியத்தைக் காக்கும்பொருட்டு மல்லவா? சற்றுயோசிக்குங்கால் நமது திரவியத்தாலேயே முக்கியமாக நமக்கு பிறரால் தீங்குண்டாகிறதென்றறியலாம். ஆகவேதிரவியமே முக்கியகாரணமாய் இருக்கின்றது; திரவியத்தைப்பற்றியே வரியும் யேற்படவேண்டும். அன்றியும் தொழில்வரியின் தன்மை இதற்குவிரோதமாகின்றது. தொழில்வரியின் தன்மையாதெனில், இந்திந்தத்தொழில்செய்வோருக்கு இவ்வளவு வரியென்று ஏற்படுத்துவதாகும். ஒரேவிதத்தொழில் செய்யும்பலருடைய ஆஸ்தியும் வரும்படியும் ஒரேவிதமானதாகவிராவென்பதுயோசனையற்றோருக்கும்எளிதில் புலப்படும். சிற்பித்தொழிலாவது சித்திரவேலையாவது செய்யுமொருவன்தன்சாமர்த்தியத்தினாலும்அதிருஷ்டத்தாலும்அதிதிரிவியவானாயிருக்கலாம். மற்றொருவன்கூழுக்கு மவழியில்லாமல்வருந்தலாம். தரகரியாகியஒருவன் ஆயிரம்சம்பாதிக்க மற்றொருவன் மாதம் பத்து ரூபாய்சம்பாதிப்பதும்அருமையாயிருக்கும். இவ்வாறேஒவ்வொரு தொழிலிலும் தொழிலாளியின் சாமர்த்தியத்துக்கும் அதிருஷ்டத்துக்கும் தக்கபடி திரிவியமும் வரும்படியும் உண்டாகுமேயன்றி தொழிலையோசித்தே வரையேற்படுத்துவதசாத்தியம்.

மேற்குறித்த முனிஷிபல் ஆக்டின்(சி) ஷிடியுலைச் சற்றுகவனித்தால் நாம்பிரஸ்தாபித்ததினுண்மைவிளங்குமெனநம்புகிறோம். இவ்வட்டவணையின் தலைப்பில் பத்துலக்ஷத்துக்குஅதிகமுதலுள்ள ஒவ்வொரு ஜாயிண்டுஸ்டாகு கம்பெனியாருக்கு. ௨00-ரூபாய்என்றும்; அதற்குள்பட்டு,இரண்டுலக்ஷத்துக்குமேற்படில்-௧00ரூபாய்என்றும், இரண்டுலக்ஷத்துக்குள்ளாகில்,௫0-ரூபாயென்றும்கண்டிருக்கின்றது. பத்துலக்ஷத்துக் கதிகமுதலுடையோர்க்கு௨00-ரூபாய்கொடுப்பதுவருத்தமில்லாவிடினும் அவர்களைப்பார்க்கிலும்பதின்மடங்கதிகலாபம் பெறுவோரிடம் அவர்களைப்போலவே இரணூறுரூபாய் வாங்குவதுமாத்திரம் அனியாயம். கொஞ்சமுதலுடையோர்க் கதிகலாபம்வருவதும் அதிகமுதலுடையோர்க்கு நஷ்டம் சம்பவிப்பதுண்டெனினும்இதுமேற்கண்ட விசேஷவித்தியாசத்தைச் சமரஸப்படுத்தமாட்டாது. அவ்வாறே இரண்டுலக்ஷமுடையோர்க்கும் பத்துலக்ஷ முடையோர்க்கும் விசேஷதாரதம்மியமிருக்கின்றது. ௨0-அல்லது ௨00-லக்ஷம் முதல்வைத்து வியாபாரஞ்செய்வோர் ௨00-ரூபாய் வரிகொடுக்க, இரண்டுலக்ஷத்துக் கரைகாசு அதிகமாயுள்ளவர்கள், ௧00-ரூபாய்கொடுக்கும்படிநேரிடுகின்றது. இதுவன்றி இரண்டாயிரம் ரூபாய் முதல்வைத்து கூட்டுவியாபாரஞ்செய்தால் இருனூறுரூபாய் வைத்துக்கூட்டுவியாபாரஞ்செய்தாலும், இரணடுலக்ஷமுதலுள்ள வர்களைப்போலவே, ௫0-ரூபாய்கொடுத்துதீரவேண்டும். இது மெத்தஅனியாய மென்பதற்குச்சந்தேகமுண்டோ?

இவ்வாறேஉத்தியோகஸ்தர்களில்௮000 ரூபாய்சம்பளமுடையோர்க்கும் ௮00-ரூபாய் வாங்குவோர்க்கு மொரேவரிஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்தஷிடியூல் ௨-வது-வகுப்பில் ஹைகோர்ட்வெக்கில்கள் முதலியோர்க்கு ௫0-ரூபாயெனக்கண்டிருக்கின்றது. இவர்களுக்குள் சிலர், பதினாயிரம் சம்பாதிப்பவர்களும்சிலர், ௫000சிலர், ௨000சிலர், ௧000சிலர், ௫00சிலர், ௨00சிலர். சிலர் அதுவுமில்லாமலுமிருக்கக்கூடும். இவ்வாறுபதினாயிரம்முதல்நூறுவரையில், ஏகசம்சாரமாய்க்கொள்ளும் இந்தவரியின் உசிதத்தைஎன்னென்று சொல்லலாம்.

௩வது, ௪வது, ௫வது, வகுப்புகளிலும் இவ்வாறு அநேகபுதுமையான ஏற்பாடுகளிருக்கின்றன. பதினாயிரம்ரூபாய்சம்

பளமுள்ள்கவர்னரும் ௫0ரூபாய்வரிகொடுக்க, மாதம் பத்துரூபாய்சம்பாதிக்கும் ஒருஸ்மால்காஸ்கோட்டுவக்கில்,௨௫ரூபாய்கொடுக்கவேண்டியதா யிருக்கின்றது. மேலும்உப்புமிளகாய்,சட்டிபானைவித்து கஷ்டஜீவனம்செய்பவரும்,௪00ரூபாய்வருமானமுள்ளவர்களைப்போல் மதிக்கப்படுகின்றனர். ஒவ்வொருவகுப்பிலும் ஒவ்வொருதொழிலிலும்உள்ள வித்தியாசங்களை யெடுத்துரைக்கப்புகின்விஸ்தாரகிரந்தமாய்முடியுமாதலால்கடையாக, மாதம் ஒருரூபாய் சம்பாதிக்கமாட்டாததோசைக்காரியும் மாதம் நூறுரூபாய் சம்பளமுள்ள உத்தியோகஸ்தரைப்போல், நாலுரூபாய் கொடுக்கவேண்டுமென்று சொல்வதேபோதுமென்று நினைக்கிறோம். இன்கம்டாக்ஸ் உண்டானகாலத்தில் பிரஜைகள் மிகவும் வருத்தப்பட்டனர். அதைவிட இந்தத்தொழிலில்வரி அநேகமடங்கதிக அநியாயத்தை விளைக்கு மென்பதற்கு மேற்சொல்லியதே போதுமான நிதர்சனமாகும். அன்றியும் இந்தசட்டம்பாஸாகும்காலத்தில் நாம்மயங்கி சும்மாயிருந்துவிட்டோம். நமது மந்தபுத்தியால் சட்டமாய்விட்ட இதன்கொடுமைகளை நாம்தான் அனுபவிக்கவேண்டும்.

ஆயினும் இக்கொடுமைகளை நமததிகாரிகள்தயையும் நீதியு முள்ளவர்களாயின் ஒருவாறு மிதப்படுத்தலாம். கம்மீஷனர்கள் தங்களுக்குக் கிடைத்திருக்கும் அதிகாரத்தை, யுக்தாயுக்தங்களை தீரவிசாரித்து மனசாக்ஷிக்கேற்க செலுத்துவராயின் பிரஜைகளுக்கு விசேஷ இம்ஸையுண்டாகமாட்டாதென்று நம்புகிறோம் ; அவர்களும் கண்மூடிக்கொண்டு கேள்வியே சரியென்று, உலகத்தில் எல்லாம் தங்களைப்போல் திரவியமுடைவரெனக்கருதிநடப்பாராயின், இக்கொடியவரியைவிட வேறுஉயிர்கொல்லிவேண்டுவதில்லையென நம்பலாம். ஆகையால் நமது கம்மீஷனர்கள், முகியமாய்நமதுதேசஸ்தராயும்சோதரராயுமுள்ளவர்தற்புகழின் பொருட்டாவது வேறெந்த காரணத்தைப்பற்றியாவது நமதுதேசத்தாருடைய க்ஷேமத்தை மறந்துவிடாமல், யுக்தாயுக்தங்களை யோசித்து, நீதிசெலுத்துவாராக வெனகடவுளைப்பிரார்த்திக்கிறோம்.

இவ்வரியைப்பற்றி சென்னையிலுள்ள கனவான்களனைவருங்கூடி கவரன்மெண்டாருக்கொருவிண்ணப்பஞ் செய்துகொள்ளப்போகின்றதாக மேற்சொல்லியதை யெழுதியபிறகு நமது செவிக் கெட்டியது. இதைக்சேட்கநமதன்பர்கள் சந்தோஷிப்பார்களென நம்புகிறோம்.

சோதரர்களே! கடந்தஇரண்டுமாதபத்திரிகைகளிலும், பிரசுரப்படுத்திவந்த புநர்விவாஹத்தைப்பற்றியவிளம்பரங்களை நீங்களெல்லோரும் கண்ணுற்றிருக்கலாம். நம்மவர்கள் நமது தேசத்துப் பெண்களுடைய நிர்பாக்கிய ஸ்திதியை நேராகக்கண்டு பரிதபித்து, யாவரும் ஏகமதஸ்தராகி புநர்விவாகத்தாலாகும் நற்பயன்களை உண்மையாகவே விரும்புகின்றனரென்பதை யுன்னிமேற்குறித்த விளம்பரத்தைப்பற்றி யாங்கள் விசேஷமாக பிரஸ்தாபிக்கவேண்டியதில்லையென நினைத்தோம். அன்றியும் நமதன்பர்கள் இதைச்சற்றும் கவனியாமல் போனதைக்கண்டு மிகவும் துயரமடைந்து இரண்டொரு எச்சரிக்கை வசனங்களை யுரைக்கத்துணிகின்றோம். நமதுதேசத்துவிதந்துகளுக்குப் புநர்விவாகஞ் செய்யுந்தகுதியைப்பற்றியாவது அப்படிசெய்வதனால் விளையும்பயன்களைப் பற்றியாவது, இங்குவிசாரிக்கஇடமும்இல்லை ஆவசியகமும்இல்லை. ஆயினும்நமது பெண்களுடைய அளவிறந்த நன்மையையாதொரு பிரதிகாரமின்றியே விரும்பினவராகி, அவர்பொருட்டு கடல்போல்பெருகி எதிர்கொள்ளும் எண்ணிறந்த சங்கடங்களையும் கவனிக்காமல் கருதுதற்கரியசௌரியத்தோடும் முன்வந்து, ஆதரவற்ற நிர்பாக்கியர்களாகிய பெண்களின்பொருட்டுப் பொருதுவோமென சத்திய த்வஜமாகியவிருதுகட்டி புநர்விவாக விளம்பரமென்னும் சங்கத்தைப்பூரித்து ஒன்றுக்குமஞ்சாதுமுன்னிட்டகாலைப் பின்வாங்காமல்நிற்கும் அதிவீரபராக்கிரமசாலிகளாகி

ய விளம்பரத்தில் குறிக்கப்பட்ட நமதன்
பர்களின் மஹிமையுள்ள தன்மையைப்ப
ற்றியும் அத்தன்மையைக்கண்டு மகிழ்ந்து
மதியாத நமது மடமையைப்பற்றியும்மா
த்திரமே இன்று சில பிரஸ்தாபிப்போம்.

உலகத்தில் அந்தந்தகாலங்களில் உண்
டாகிய ஒவ்வொரு நவீனசீர்திருத்தமும்
விருத்திகரமான காரியமும், ஒவ்வொரு
புண்ணியவானுடைய அளவிறந்த முயற்
சியாலும், அதிசயிக்கத்தக்கதைரியத்தாலு
ம், கைக்கூடியதேயன்றி, காக்கைக்கூழாம்
போன்ற பலஜனங்களின் வீணிரைச்சலி
னலொன்றும்முடிந்ததில்லை. தமதுசோ
தரர்களின் நன்மையைக்கருதிஉலகத்துக்
குஅளவிறந்த நன்மை செய்தமஹான்க
ளுக்குஎப்பொழுதும்ஏனையோர் சஹாய
ம்செய்யாமல்போவதுமன்றி, அவர்களுத்
தேசித்தகாரியத்துக்குஎண்ணிறந்த ஆட
ங்கத்தை யுண்டாக்கி, அவர்களைப்பலவா
று நிந்தித்துப் பலதுன்பங்களுக்குள்ளா
க்குகின்றனர். ஐரோப்பாவில்ஜேம்ஸ்வாட்
டு, கொபர்னிகஸ், கலிலியோமுதலிய பல
மஹான்களுடைய் சரித்திரமேஇதற்குப்
போதுமான சாக்ஷியமாகும். புனர்விவா
ஹத்தைப் பழக்கத்திற்குக்கொண்டுவரத
மதுசக்த்தைப்பாராமல் முயற்சிசெய்யும்
நமதன்பர்களிருவரும் மேற்குறித்தவர்க
ளைப்போல் அதிகமஹிமையும்சாமர்த்திய
சாஹசாதிகுணங்களுமில்லாதவராயினு
ம், அவர்களுடையஅந்தஸ்தையும்அவர்க
ள்செய்யத்துணிந்த காரியத்தின் உசிதத்
தையும், அச்செய்கையால் அவர்களிககி
ப்போது நமதுபாமரத்தினல் விளையத்த
க்கநிந்தை, அவமானம், அபகீர்த்திமுத
லிய பலசங்கடங்களையும், இவ்வளவு பி
ரயாசைக்கும், பெருநன்மை செய்கின்ற
னரென்னும்ஆத்மதிருப்தியைவிட வேறு
கைம்மாறு யில்லாதிருத்தலையும் சற்று
யோசிக்குங்கால் இவர்களுடைய பெருந்
தன்மை, இவ்வுலகத்தைஜெயித்து ஏகச
க்கிராதிபதிகளாயாண்டஅரசரது, சௌ
ரியத்தையும், இக்காலத்தில்பிரசிடென்சி
காலேஜூமுதலிய விடங்களில்வித்தியாப்
யாசஞ்செயது பலபட்டங்களைப் பெற்று
உயர்ந்த உத்தியோகம்செய்து ஆத்மசம்ர
க்ஷணையன்றிவேறொன்றையுஞ் செய்யவ
றியாத அனேகபுண்ணியவான்களுடைய
அழகியதன்மையையும் அதிக் கிரமிக்கி
ன்றனரென்றுரைக்கயாரேனும்சந்தேகிப்
பார்களோ. இவ்விரு ஸ்மார்த்தசிகாமணி
களும் கூடியவரையில் கற்றுணர்ந்து, நற்
குணமுடையவராகி, தகுந்தசர்க்கார்உத்
தியோகம்பெற்றுசுகஜீவனஞ்செய்பவரா
யிருப்பதால்இவர்களினத்தாருக்குள்இவ
ர்களுக்கிஷ்டமானகன்னிகைகள்மணம்பு
ரிய வேண்டுமெனில் கிடையாமல் போக
மாட்டா. சென்றமார்ச்சிமாதபத்திரிகையி
லச்சிட்டமுதல் விளம்பரத்தைக் கண்ட
தென்னாட்டிலுள்ள வொருதனவான், அ
தனல் யாரோவொருவிதந்து கல்லியாண
ஞ்செய்துகொள்ள இஷ்டமுள்ளவளாயி
ருக்கின்றாளென்று நினைத்து, ஐயாயிர
ம்ரூபாய் கொடுத்தால் தான்விவாகம் செ
ய்துகொள்வதாக அறிவித்தார்; அன்றியு
ம்நமதன்பர்கள் திரவியாபேக்ஷையில்லா
மல், பெண்களுடையநன்மையும் அபிவி
ருத்தியும் உண்மையாக்கருதியன்றோ அ
றிந்தும் அறியாமையையே பாராட்டுந் ந
மது தேசத்தாருக்கு தமது நடையால் ந
ல்வழிகாட்டத்துணிந்தனர். இவர்களு
டையஎண்ணம் கைக்கூடுவதற்குவதற்கு
ள்ள ஆடங்கமெல்லாம்விதந்துக்களை யு
டையபிதாக்கள்முன் வராமையாகவிருக
கின்றது. இவ்வளவுசுகுணமும்சத்கீர்த்
தியுமுள்ளபுண்ணியவான்களைத், தமக்கு
ப் புருஷராகப்பெற எப்பெண்களுடை
யபாக்கியமோயாங்களறியோம். இவர்கள்
கருதியகாரியம் கைக்கூடினும் இல்லாவி
ட்டாலும் இவர்கள் நல்லெண்ணத்தின்
பொருட்டு, இப்பொழுது சீர்திருத்தம
டையும் நமதுபெண்களும், இனியுண்டா
கப் போகின்றவரும் இவர்களைஎன்றும்அ
கமகிழப்பு கழ்ந்து இவர்கள் சத்கீர்திஎன்
றும் நிலைக்கும்படி இவர்களை சன்மானிப்
பார்களென்று பூர்தியாய்நம்புகின்றோம்.

ருக்குவேதசம்ஹிதை.

அநுவாக்ம் ரு.

சூக்தம், க. (கஅ)

[ருஷியும்பாவும் முன்போல், முதல்ஐ

ந்துருக்குக் தேவதை பிரம்மணஸ்பதி. ஆனால் அவைகளுள் நான்காவதில் இந்திரஸோமர்களும், ஐந்தாவதில்தக்ஷிணையும் சேர்ந்திருக்கிறார்கள். ௬-௭-௮ இம் மூன்று ருக்குகளும்ஸதஸ்பதிக்குரியன; ஒன்பதாவது ஸதஸ்பதிக்குரியதென்றாகிலும் நராசம்சனுக்குரிய தென்றாகிலும்கொள்ளத்தக்கும்.]

வர்க்கம். ௧௪.

௧. ஸோமாநம் ஸ்வரணம் க்ருணுஹி ப்ரஹ்மணஸ்பதே கக்ஷீவந்தம் ய ஔஶிஜ:.

ஓ பிரம்மணஸ்பதே ஸோமாபிஷவம்பண்ணுகின்ற (என்னை)எவர், உசிக் என்பவளுடைய புத்திரரோ அந்த கக்ஷீவந்தரை * ப்போல் பிரகாசமுள்ளவனாய்ச்செய்யும்.

௨. யோ ரேவாந்யோ அமீவஹா வஸுவித்புஷ்டிவர்தந: ஸ ந: ஸிஷக்து யஸ்துர:.

எவர்பணக்காரரோ, வியாதிதீர்க்கிறவரோ பொருள் சம்பாதிக்கின்றவரோ, புஷ்டியை விருத்தியாக்கிறவரோ, (மேலும் பயனளிப்பதில்) ஆதரிக்கக்கடவது.

௩. மா ந: ஶம்ஸோ அரருஷோ தூர்தி: ப்ரணங் மர்த்யஸ்ய ரக்ஷா ணோ ப்ரஹ்மணஸ்பதே.

எங்களைத் துன்பப்படுத்த நெருங்கிய மனிதர்களுடைய ஹிம்ஸகமான அவதூறுகள் எங்களைத்தீண்டாதிருக்க, ஓ பிரம்மணஸ்பதே எங்களைரக்ஷியும்.

௪. ஸ கா வீரோ ந ரிஷ்யதி யமிந்த்ரோ ப்ரஹ்மணஸ்பதி: ஸோமோ ஹிநோதி மர்த்யம்.

எந்தமனிதனை இந்திரன் அடை*கிறானோ, பிரம்மணஸ்பதி (யடைகிறானோ) ஸோமன் (அடைகிறானோ) அவனே வீரனாய் (இருந்துகொண்டு) நசிக்கிறதில்லை.

௫. த்வம் தம் ப்ரஹ்மணஸ்பதே ஸோம இந்த்ரஶ்ச மர்த்யம் தக்ஷிணா பாத்வம்ஹஸ:.

ஓ பிரம்மணஸ்பதே அந்தமனிதனைநீர், பாபத்தினி † ன்றும் (காக்கும்.) (அப்படியே) ஸோமன்காக்க: இந்திரன் (காக்க.)

வர்க்கம்-௧௫.

௧. ஸதஸஸ்பதிமத்புதம் ப்ரியமிந்த்ரஸ்ய காம்யம் ஸநிம் மேதாமயாஸிஷம்.

ஆச்சரியகரமானவரும், இந்திரனுக்குப்பிரியமானவரும்‡ விரும்பத்தக்கவரும், பொருள் கொடுப்பவருமாகிய ஸதஸ்பதியை, மேதயை(ப்பெறுதலின்பொருட்டு) அடைந்தேன்.

---

* இவருடைய விருத்தாந்தம் மச்சிய வாயு முதலிய புராணங்களிலும், பாரதத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.—அதாவது: களிங்க ராஜாவானவர் சந்ததியின்மையால் புத்திரோத்பாதனத்தின்பொருட்டு தன் ராக்கினியை தீர்க்கதமஸ் என்னும் முனிவனிடம் போகச்சொன்ன போது அவள் தான் போகாமல் உசிக்கு என்றும் தன் வெள்ளாட்டியை யனுப்பினாளென்றும், அம்முனிவர் அந்த கிருத்திரிமத்தை யறிந்து உசிக்கென்பவளை தன் பிரசாதத்தால் பவித்திரமாக்கி, அவளால் கக்ஷீவத் என்னும் புத்திரனைப்பெற்றானென்றும், அவனை அரசன் ஸ்வீகாரம் செய்துகொண்டமையால் அவர் க்ஷத்திரிய வம்சத்தைச் சேர்ந்தபோதிலும், பிறப்பின் நிமித்தம் பிராம்மணனாகவும், ருஷியாகவும் மதிக்கப்பட்டாரென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் யாகங்கள் செய்யவும் மந்திரங்கள் சொல்லவும் தகுந்தவ ரென்று, தைத்திரீய பிராமணத்தில் சொல்லியிருக்கிறது.

* ஹிநோதி விருத்திசெய்கிறானே வென்னு மர்த்தமாகும்.

† அம்ஹஸ: தீங்கினின்று எனவும் பொருளாம்.

‡ ஸோமபானத்தில் கூட்டுறவினால் எனவுமா.

௭. யஸ்மாத்ருதே ந ஸித்⁴யதி யஜ்ஞோ விபஶ்சிதஶ்சந । ஸ தீ⁴நாம் யோக³மிந்வதி ।

யாரின்றிப் புத்திமான்களுடைய யக்கியமும் சித்திக்கிறதில்லையோ அவர், கிரியைகளின் * சம்பந்தத்தை யடைகிறார் †

௮. ஆத்³ருʼத்⁴நோதி ஹவிஷ்க்ருʼதிம் ப்ராஞ்சம் க்ருʼணோத்யத்⁴வரம் । ஹோத்ரா தே³வேஷு க³ச்ச²தி ।

(ஸதஸ்பதிக்கடவுளானவர்)ஹவிசுசெய்தவதை, பின்னேடுதானே விருத்திபண்ணுகிறார் : யக்கியத்தை செவ்வையாய் நிகழ்ந்ததாகச் செய்கிறார் ; (எங்களுடையஸ்துதிரூபமான) வாக்கான தேவர்களிடம் போகின்றது. ‡

௯. நராஶம்ஸம் ஸுத்⁴ருʼஷ்டமமபஶ்யம் ஸப்ரத²ஸ்தமம் । தி³வோ ந ஸத்³மமக²ஸம் ।

மிகவும் திண்மையானவரும், அதிசயமான புகழ்பெற்றவரும், ஸ்வர்கலோகத்தைப்போல் தேஜசுடையவருமாகிய நராசம்ஸனை § ப்பார்த்தேன். ¶

---

* தீ⁴நாம் புத்திகளின் என்றுமாம்.

† அதாவது யக்கியத்தை முடிக்கிறார் என்று பொருள்.

‡ ஹோத்ரா தே³வேஷு க³ச்ச²தி அழைக்கப்பட்ட தேவதைகள் யஜமானனைப்புகழ தேவர்களிடம் போகிறார்கள் என்றுங் கொள்ளலாமென் றுரை.

§ இப்பதத்தை ௧௩-ம் சூக்தத்து ௩-ம் ருக்கின்படி அக்கினிரூபத்தைக் குறிக்கின்றதாயாவது, அல்லது 'மனிதரால் புகழப்படுவோன்' என்னும் அதன் இயல்பான பொருளில் வந்து ஸதஸ்பதியைக் குறிக்கிறதாயாவது கொள்ளலாமென்று உரையில் கூறியிருக்கிறது.

¶ "சாஸ்திரதிருஷ்டியால் பார்த்தேன்" என உரை.

பகவத்கீதை.

௧௮-வது-அத்தியாயம்.

அர்ஜுனன்சொல்.

௧. ஓய், புஜபலமுள்ளவனும்இந்திரியநியாமகனுமான கேசிநிஷூதன! சன்னியாசத்தினுடையவும், (கர்மத்)தியாகத்தினுடையவும் தத்துவங்களைப் பிரத்தியேகமாய் அறியவிரும்புகிறேன்.

கிருஷ்ணன்சொல்.

௨. கவிகள் காம்மிய கர்மங்களுடைய பரித்தியாகத்தை சன்னியாசமாக அறிவார்கள், வித்வாம்ஸர்கள் சகலகர்மங்களுடைய பலனையும் பரித்தியாகஞ் செய்வதே தியாகமென்றுசொல்வார்கள்.

௩. சிலபண்டிதர்கள் கர்மம், தோஷமுடையதாதலால் தியஜிக்கத்தக்கதென்பார்கள். பின்னுஞ்சிலர் யக்கியதான தபஸ்ஸுக்களாகியகர்மங்கள் விடத்தக்கவல்லவென்பார்கள்.

௪. ஓய்பரதோத்தமனே! இந்தத்தியாகத்தைப்பற்றி என்னுடைய மனோநிச்சயத்தைக் கேட்பாயாக. ஓய்புருஷருக்குள் புலியே! அது மூன்றுவிதமாக சொல்லப்படும்.

௫. யக்கியதான தபோரூபமாயுள்ளதெவையோஅந்தகர்மங்கள்விடத்தக்கனவையல்ல. யக்கியதானதபஸ்ஸுகள் பண்டிதர்களுக்குப் பாவனமானவை.

௬. ஓய்பார்த்தனே! மேற்சொல்லப் பட்ட கர்மங்கள், மமகாரத்தையும்பலனையும் விட்டு செய்யத்தக்கவை; இதுஎன்னால் நிச்சயிக்கப்பட்ட உத்கிருஷ்டமதம்.

௭. நித்தியமான கர்மங்களைப்பரித்தியாகஞ்செய்வதுயுக்தமல்ல, மோஹத்தினாலவற்றை விடுவதுதாமசமென்றும் சொல்லப்படும்.

௮. எவன் சரீரப்பிரயாசை பயத்தினால் எந்தகர்மத்தை துக்ககர்மமென்று விட்டுவிகிறானே, அவன்ராஜஸகுணச் சம்பந்தமான தியாகஞ்செய்தவனாய் தியாகத்தின் பலனை (மோக்ஷத்தை) யடையமாட்டான்.

௯. ஓய்அர்ஜுனா! ஆசக்தியையும் பலத்தையும்விட்டு, எந்த நித்தியகர்மம் செய்யத்தக்கவையென்று செய்யப்படுகின்றவோ, அந்தத்தியாகமானது சத்வகுணத்தாலாயதென (என்)அபிமதம்.

௰. சத்வகுணத்தால் வியாபிக்கப் படவும், ஆத்மக்கியானமுடையவும், நிஸ்ஸந்தே

கமுடையவுமான (கர்மத்)தியாகி அசுபகரமான கர்மத்தைத்வேஷிக்கவுமாட்டான், சுபகரமான கர்மத்தில் ஆசையும்வைய்யான்.

கக. தேகத்தையுடையவன் சகலகர்மங்களையும் பரித்தியஜிப்பது அசாத்தியமாயிருப்பதால் கர்மபலத்தைத் தியஜிக்கிரவனெவனோ அவனே தியாகியென்று சொல்லப்படுவான்.

கஉ. இஷ்டமாகாததென்றும், இஷ்டமானதென்றும் (இவ்விரண்டின்) சேர்கையும்ஆகிய மூன்றுவிதகர்மங்களுடைய பலன் தியஜிக்காதவர்களுக்குஜன்மாந்திரத்திலாகின்றது, சன்னியாசிகளுக்கு ஆவதில்லை.

கங. ஒய்புஜபலமுடையவனே! சமஸ்த கர்மங்களுடையசித்தியின்பொருட்டு சித்தாந்தத்திலும் சாங்கியத்திலும் சொல்லப் படுகின்ற ஐந்தாகிய இந்தகாரணங்களை என்வாக்கினால் அறிவாய்.

கச. விதிக்கப்பட்டமார்க்கமும், கர்த்தா (வாகியமனதும்) நானாவிதமான உபகரணங்க(ளாகியஇந்திரியங்க)ளும், (அவற்றின்) வெவ்வேறான சேஷ்டைகளும், இவற்றுள் (காரணங்களில்) ஐந்தாவதாயுள்ள தெய்வமும் (ஆகிய) இவ்வைந்தும்,

கரு. மனிதன், மனோவாக்குக் காயங்களால் நியாந்கியமான எந்தகர்மங்களைச் செய்யவும், காரணங்களா யிருக்கின்றன.

தைத்தரீய உபநிஷத்.

சீக்ஷாவல்லீ.

முதல்அநுவாகம்.

(மொழிபெயர்ப்பு.)

மித்திரன் (க) நமக்கு க்ஷேமத்தை(யளிப்பவனாக) —வருணன் (உ) (நமக்கு) (சுகம(ளிப்பானாக.)—அரியமா; (ங) நமக்கு சுகமளிப்பானாக.—இந்திர(னும்) (ச) பிரஹஸ்பதியும் சுக(மளிப்பார்களாக.)—பருத்தஅடிவைப்போனாகிய விஷ்ணு (ரு) சுக(மளிப்பானாக)— பிரம்மத்தின் பொருட்டு வந்தனம்—ஓ! வாயுவே உனக்குவந்தனம்—நீயே (ஸர்வபிராண ஸ்வரூபமாதலால் புலப்படும்) பிரத்தியக்ஷப்பிரம்மம்.—நினையே பிரத்தியக்ஷ பிரம்மமாக சொல்லுகின்றேன். (நினையே)நீதியுடையதாகச் சொல்லுகின்றனன்.— (நினையே) ஸத்தியமாகச் சொல்லுகின்றேன்.—அது (பிரம்மம்) என்னைஇரக்ஷிக்கக்கடவதாக.— (சு) அது (வே) ஆசாரியனை இரக்ஷிக்கக்கடவதாக,—என்னை இரக்ஷிக்கக்கடிவதாக—ஆசாரியனை இரக்ஷிக்கக்கடவதாக.

ஓம் - சாந்தி! சாந்தி! சாந்தி! †

முதலனுவாகம் முற்றிற்று.

இரண்டாம் அனுவாகம்.

(உ. (நாம்) சீக்ஷையை (எவ்விடத்தும் யாவருமறியும்படி) விரித்துரைப்போம். (வியாக்கியானிப்போம்.) —வர்ணம் (அகரமுதலவெழுத்து.)மாத்திரை (ஹ்ரஸ்வம் முதலியது)-பலம்-ஸாமம்(என்றானவர்ணங்களை ஸமமாகஉச்சரித்தல்.)—ஸந்தானம்(என்றால் மத்தியஉச்சாரணையின் தொடர்ச்சி)—சீக்ஷாத்தியாய்(விஷயங்கள்)இவ்வாருரைக்கப்பட்டன

இரண்டாமனுவாகம். முற்றிற்று.

மூன்றாமனுவாகம்.

(க.) (ஆசாரிய சிஷியர்களாகிய) நம்மிருவருக்குமகூட (உபநிஷத்தை அரிவதாலுண்டாகும்) யசஸ்ஸிருக்கட்டும்—நம்மிருவருக்கும்கூட பிரம்மவர்ச்சஸ் (உண்டாகட்டும்)—அதின்பிரகு ஸம்ஹிதைக்கு உபநிஷத்தை (தியானத்தைப்பத்தி) வியாக்கியானிப்போம் (விரித்துரைப்போம்.)—ஐந்து அதிகரணங்களில் (விஷயங்களில்) — (எவைஎன்றால் அவைகளைச் சொல்லுகின்றார்) உலகத்தைக்குறித்தும், தேஜஸைக்குறித்தும் வித்

க பிராணனுக்கும் பகலுக்கும் அபிமானதெய்தவதையாகிய மித்திரன்.

உ அபானத்திற்கும் இரவுக்கும் அபிமான தேவதையாகிய வருணன்.

ங கண்ணுக்கு அபிமான தேவதையாகிய அரியமாவும்.

ச பலத்திற்கும் புத்திக்கும் அபிமான தேவதையாகிய இந்திரன் பிரஹஸ்பதி இவர்களும்.

ரு பாதாபிமானியாகிய விஷ்ணுவும், அவ்வபிமானவஸ்துக்களின்பேரில் இரக்ஷிப்பார்களாக.

† எவ்விடத்தும் அனவருக்கும் சவுக்கிமுண்டாகும்பொருட்டும் ஆதரவுடன் தொடர்மொழியாக மும்மடங்கு தைவவந்தன பூர்வகமாக உரைக்கப்பட்டன.

(சு.) வித்தியார்த்தியாகிய என்னை வித்தைய யளிப்பதாலும், ஆசாரியனுக்குக்கற்பிக்கும் ஸாமர்த்தியமளிப்பதாலும் இருவரையுமிரக்ஷிப்பிப்பதாக. இவ்வாறு சங்கரபாஷியத்தி லுரைசெய்திருக்கின்றது.

தையைக்குறித்தும் பிரஜையைக் குறித்தும் ஆத்மாவைக்குறித்தும் என—இவைகள்(வேதமறிந்தோரால்) மகாஸம்ஹிதைஎனக் கூறப்படுகின்றன; அதின்பின்பு உலகத்தைக்குறித்த (விஷயம்) — (ஸம்ஹிதைஎன்னும்பதத்தில்) பிரதிவிமுதல்ரூபம் (பகுதி—ஸம்) ஸ்வர்கம் உத்தரரூபம் (விகுதி—தா;) ஆகாயம்ஸந்தி(இடைநிலை—ஹி.)

(உ.) வாயு, (காத்து) உடன்படுத்தும்கருவி (ஸாதனம்) —இஃதேஉலகத்தைக் குறித்த (விஷயம்)—அதின்பின்பு தேஜஸைக்குறித்த (விஷயம்), அக்னிமுதல்ரூபம்(பகுதி.)—ஆதித்தன் உத்தரரூபம் (விகுதி.) —அப்புஸந்தி.—மின்னல்சேர்க்குங்கருவி; இஃதேதேஜஸைக்குறித்த (விஷயம்.) இதின்பிரகுவித்தையைக்குறித்த (விஷயம்.) ஆசாரியன் முதல்ரூபம் (பகுதி.)

(ங.) சிஷியன் உத்தரரூபம் (விகுதி.)—வித்தை ஸந்தி, வேதம் உடன்படுத்தும் கருவி; இஃதேவித்தையைக் குறித்தவிஷயம்—பின்பு பிரஜயைக்குறித்த (விஷயம்.) மாதா முதல்ரூபம் (பகுதி.)—பிதா உத்தரரூபம். பிரஜை ஸந்தி, ஜன்மத்தின்கருவி (இந்திரியம்) சேர்க்கும் ஸாதனம்—இஃதேபிரஜயைக் குறித்த விஷயம்.

(ச.) அதின்பின்பு ஆத்மாவைக் குறித்த (விஷயம்)—கீழ்தாடை பூர்வரூபம், மேல்தாடை உத்தரரூபம், வாக்கு ஸந்தி, நாக்குஉடன்படுத்தும் கருவி.—இஃதே ஆத்மாவைக் குறித்த விஷயம்.—இவைதான் மகத்தாகிய ஸம்ஹிதை—எவனால் வியாக்கியானம்செய்யப்பட்ட இம்மஹா ஸம்ஹிதையை அறிகின்றானோ அவன், பிரஜையுடனும், பசுக்களுடனும், பிரம்மதேஜஸ்ஸுடனும் அன்னம்முதலியவத்துடனும் ஸ்வர்கலோகத்துடனும் சேரப்பட்டவனாவான்.

பேகன்வியாசம்.

(மொழிபெயர்ப்பு)

நாஸ்திகத்தைப்பற்றியது.

இப்பிரம்மாண்டமானது (அந்தரியாமியாய் ஆளானின்றகடவுளாகிய) ஓர்மனதில்லாமல் வீற்றிருக்கின்றதென நம்புவதைவிட, லீஜண்டு, டால்மட், ஆல்கோரான் (முதலியகிரந்தங்)களில் காணப்படும் எல்லாக் கட்டுக்கதைகளையும் நம்புவதெனக் கெளிதாயிருக்கின்றது; ஆகவே கடவுள் நாஸ்திகத்தின் குற்றத்தைவிளக்க அற்புதங்களைச் செய்யவில்லை. ஏனெனில் அவனது சாதாரணமான சிருஷ்டிப்பொருள் அதன்குற்றத்தைக் காட்டுகின்றது. லேசமானதத்துவவிசாரணை மனிதனுடையமனதை நாஸ்திகத்தை நோக்கும்படிசெய்யினும் ஆழ்ந்ததத்துவவிசாரணை மனிதர்மனங்களை ஆஸ்கத்திற்குக் கொண்டுவருகின்றது; இரண்டாவதாம்(துணைக்)காரணங்கள் இங்குமங்குமாய்ச்சிதரப்பட்டவாய்க் காணுமளவும் மனதுஅவற்றிலேயேதங்கிஅப்புறஞ்செல்லா(என்றால் அவற்றையே முதற்காரணமாய்க்கொள்ளும்); ஆயினும்அவைகள் ஒருசங்கிலியாகக் கோர்த்துச்சேர்க்கப்பட்டிருப்பதைக்காணவே(அவற்றைச்சேர்க்கும்)கடவுளையும் பேரறிவையும்தேடாமலிருத்தலசாத்தியம். நாஸதிகத்திற்காகஎம்மதத்தினர்மிகநிந்திக்கப்படுகின்றாரா, அப்படிப்பட்டலியூசிப்பஸ், டிமாகிரிடஸ், இபிகியூரஸ் என்பவர் சமயத்தோரே ஆஸ்திகத்தை மிகஸ்தாபிக்கின்றவராகின்றனர். ஏனெனில் (யாதொருகிரமமின்றி) வைக்கப்பட்டிருக்கும்அளவற்றஅணுஅல்லதுவிதைக்கூட்டங்கள் : அவற்றைச்சீர்படுத்தும்நாயகனையன்றி, (உலகத்தின்கண்காணப்படும்) இந்தக்கிரமத்தையும் அழகையும்உண்டாக்கினவென்பதைவிட, விகாரப்படும்நான்குதத்துவங்கள் விகாரமற்ற (மற்றொரு)ஐந்தாம்பூதத்தோடும் நித்தியமாகவும் வீற்றிருப்பதால்(அவற்றைச்சீர்படுத்த) கடவுள்வேண்டியதில்லையென்பதாயிரமடங்கதிகமாய் நம்பத்தகுந்ததா யிருக்கின்றது. “புத்தியீனன் கடவுள்இல்லையென்றுதன்இருதயத்தில் சொல்லுகின்றனன்”என்று வேதங்கூறுகின்றதேயன்றி, “புத்தியீனன்தன்இருதயபூர்வகமாய்நினைக்கின்றான்”என்றல்ல. ஆகையால் தான்எதை விரும்புகின்றானோ அதைப் பாடம்செய்துகொண்டதுபோல்சொல்லுகின்றானேயன்றி, அதைமுழுமையும்நம்புகின்றானென்றாவது, அல்லதுஉள்ளூற அறிகின்றானென்றாவதல்ல. ஏனெனில் கடவுளில்லாமலிருந்தால் எவர்களுக்குநலமாயிருக்குமோ அவர்களையன்றி வேறொருவரும் கடவுளிருப்பை மறுதளிப்பதில்லை. நாஸ்திகர்கள் தங்களுக்குள்ளேயே மயக்கமுண்டாயிருப்பதுபோல் தங்கள்மதமாகியஇதைப்பற்றி, எப்பொழுதும் பேசிக்கொண்டிருப்பார்கள்; மற்றவர்களுடைய சம்மதத்தால்பலமடையவும் சந்தோஷப்படுவார்கள். (ஆகையால்) நாஸ்திகம்மனிதனுடைய உதட்டிலிருப்பதுபோல் இருதயத்திலில்லைஎன்பது இதனால் விளங்குவதுபோல்வேறெதனாலும் விளங்கவில்லை. இதுவுமன்றி நாஸ்திகர் மற்றசமயத்தாரைப்போல் சிஷியர்களைப் பெறமுயல்வதையும்காணலாம்; மேலும் (நாஸ்திகத்தின் பொருட்டு) துன்பப்படுத்தப்பட்டு

மதைக் கைவிடாதவர்களுமுண்டு. கடவுளெனும் பொருள் இல்லையென நிஜமாக வேநம்பினவர்க்ளாயின், ஏன்இவர்கள் வருத்தப்படவேண்டும்? இவ்வுலகத்தை யாளுவதில் சம்பந்தப்படாமலே தம்மில்தாமேஆநந்திக்கும் அழகியபூதங்கள் உளவென இபிகியூரஸ் கூறியதுதற்புகழைக்காக்கும்பொருட்டு கபடமாகசொன்னாரென்று அவர் நிந்திக்கப்படுகின்றார். ஆந்தரியத்தில் கடவுளில்லையென்று நினைத்தபோதிலும், (ஏனையோரை) சமரசப்படுத்திக்கொள்ள (என்றால் தாக்ஷண்ணியத்தால்) அவ்வாருரைத் தாரென்று சொல்லப்படுகின்றது. ஆயினும் இவர்கருத்திதுவன்று. இவர்வாக்கு மேன்மையும்தெய்வீகமுமுள்ளதாயிருகின்றது.(யாதெனில்,) "சாதாரண ஜனங்களுடைய தெய்வங்களை மறுப்பது அநுசிதமன்று, சாதாரண ஜனங்களுடைய அபிமதங்களைத் தெய்வங்களினிடத்து ஆரோபிப்பது மாத்திரம் அநுசிதமே." இதைவிட (ஆஸ்திகராகமதிக்கப்படும்) பிலேடோஎன்பவர் விசேஷமாக சொல்வதசாத்தியம். (உலகத்தில்கர்த்தனுடைய)ஆளுகையில்லையெனமறுதளிக்க அவருக்குதைரிய முண்டான போதிலும், ஸ்வபாவத்தை (என்றால் கடவுளின்தன்மையை) மறுதளிக்க அவருக்கு வன்மையில்லாமற் போயிற்று. பல தேவதாராதிகளுக்குள் (கார்க்கேயரோமகருக்குள்)பிரஹஸ்பதிபுதன், அங்காரகன், முதலியநாமங்களிருந்தும்தெய்வம்என்னும் பதமில்லாதிருந்தாலெப்படியோ அதுபோல, வெஸ்டிபிண்டியர்களுக்குள் கடவுளுக்குப் பெயரில்லாவிடினும் அவர்களுடைய சில்லரைதெய்வங்களுக்கு வெவ்வேறுபேர்களுண்டு. ஆகையால் நாகரீகமற்றஇவர்களுக்கும்(கடவுள் என்னும்)கருத்தின் வீஸ்தாரமும் பதவியும், தெரியாமற்போனாலும் அக்கருத்துமாத்திரம் உளவென்பதிதனால்காட்டப்படுகின்றது. ஆகையால் வெகுஆழ்ந்ததத்துவக்கியர்களோடுநாகரிகமற்றசாட்டாள்களும் நாஸ்திகரை எதிர்த்துபோர் செய்கின்றனர். டையகோராஸ், பைடன், லூசியன, மற்றுஞ்சிலரைப்போல் மனனமுள்ள நாஸ்திகர் வெகுஅருமை; ஆயினும் இவர்கள் உண்மையில் உள்ளவரைப்பார்க்கிலும் அதிகமாய்அகப்படுகின்றனர். நிலைபெற்றிருக்கும் சமயத்தையாவது மூடக்கொள்கையையாவது நிந்திக்கும் ஒவ்வொருவனும்இவர்களால்நாஸ்திகரென இகழப்படுகின்றனன். அன்றியும் தெய்வீகப்பொருள்களையாதொரு உணர்வின்றி, கையாண்டுவருகிற பெரும்நாஸ்திகர்கள் கபடசித்தர்கள்; ஆகவேஇவர்கள் (நரகமாகிய)எரியைத்தானடையவேண்டும்.

மநுநூல்.

(தொடர்ச்சி.)

(௧௯0.) எவனுடையவாக்கும், மனதும், பரிசுத்தமானவையும் எப்பொழுதுஞ் செம்மையாக காக்கப்பட்டவையுமாயிருக்கின்றனவோ அந்தபுருஷன் (மோக்ஷலாபத்தால்ஸர்வக்கியத்துவத்தையும்) வேதாந்தத்தாலறியத்தகுந்த எவ்விதபயனையும் அடைகின்றனன்.

(௧௯௧.) உபாதிக்கப்படும்பொழுதும் எவ்வகை மனிதனும் இழிவான சொற்களைச்சொல்லத்தகாதவன்; கர்மத்தாலும்புத்தியாலும் பரக்ரோசத்தை யற்றவனும், அயலாரின் மனம்நோக ஒரு வார்த்தையுஞ்சொல்லாதவனுமாக யிருக்கக்கடவன். எவ்வகை மனிதனும் ஸ்வர்கப்ராப்திக்கு விரோதமற்ற சொற்களைச் சொல்லக்கடவான்.

(௧௯௨.) எவ்வகை ஸன்மானத்தையும் பார்ப்பான்விஷத்தைப் போலொழிக்க வேண்டும்; அப்படிக்கே எவ்வகை அவமானத்தையும் அமிருதம்போல் ஆகர்ஷிக்க(தேட)வேண்டும.(என்றால் மானாவமானங்களைஸமமாய் நினைத்தும், அன்னியன் அவமானம் செய்திடினும் அதைப்பற்றி வருத்தப்படத்தக்கவனல்ல.)

(௧௯௩.) (அவமானத்தை ஸஹித்திருப்பதற்கு ஹேதுவைச் சேர்ல்லுகின்றனர்.) எவனால் அவமானம் பண்ணப்பட்டபோதிலும்(அதைப்பாராட்டாவிடில்) சுகமாக நித்திரைசெய்யலாம், சுகமாக விழித்துக்கொள்ளலாம், இவ்வுலகத்தில் சுகமாக காரியத்தில்பிரவர்திக்கலாம்; ஆனால் அவனை அவமதித்தவன் விசேஷமாகநாசமடைகிறான்.

(௧௯௪.) மேற்சொல்லிய கிரமப்படிக்குஸம்ஸ்காரத்தாலாய ஆத்மாவையுடையத்விஜனானவன்ஆசாரியனிடம் வஸிக்குங்கால் கொஞ்சங்கொஞ்சமாகவேதத்தை அத்தியனம்பண்ணுவதாலாகும் நல்லொழுக்கத்தைச்சம்பாதிக்கக்கடவன்.

(கசுரு.) (அத்தியயனத்தின் அங்கத்தைச்சொல்லுகின்றார்) எவனுனல் த்விஜனம் (முடையவனே) அவனல் அனேக விதமாகிய தபோ விசேஷங்களோடும், விதிக்கப்பட்ட விருதங்களுடனும் வேத முழுமையும் முக்கியமாய் திவ்வியோபநிஷத்துகளும் அத்தியயனம் செய்யப்பட வேண்டும்.

(கசுசு.) த்விஜோத்தமனுகிய பிராம்மணன் எப்பொழுதும் தபஸைச் செய்வானுகில் வேதத்தையே யல்லவோ எப்பொழுதும் அத்தியயனம் செய்யக்கடவன். விப்பிரனுக்கு அவ்வேதாப்பியாஸமேயல்லவா இவ்வுலகத்தில் உத்தமமாகிய தபஸெனச் சொல்லப்படுகின்றது.

(கசுஎ.) எந்தத்விஜனுனல்மாலையுடையோனுகிலும்(என்றால் மாலையணியும்படி விஷயாபேக்ஷை யுடையவனுகிலும்) தன்சக்திக்குத்தகுதியாய்தினந்தோறும் அத்தியயனம் செய்கின்றுனே அவன்உண்மையாய் தன்நகபரியந்தமாகிய முழுதேஹத்தோடும் அத்தியுசிதமான தபஸைச் செய்கின்றவனுகிறான்.

(கசுஅ.) எந்தத்விஜின் வேதத்தைஅத்தியயனம்செய்யாமல் இதரமாகிய உலகவியாபாரார்த்தமாகிய வித்தையில் உழைக்கின்றுனே அவன் உடனே ஜீவித்திருக்கையிலும் சூத்திரத்துவத்தையேஅடைகிறான். அவன் வம்சத்தாருமப்படியே.

(கசுகூ.) த்விஜனுக்குமுதல்பிறப்புத்தாயினிடத்திலும் இரண்டாம்பிறப்பு உபனயனத்தாலும் மூன்றும் பிறப்பு யக்கியதீக்ஷையாலும் என இவ்வாறுவேதத்திலுரைக்கப்பட்டிருக்கின்றன.

(கஎ0.) மேற்கூறிய மூன்றுஜன்மத்தில் பிரம்மஜன்மமெதுவெனில் முஞ்சிக்கட்டுதலைக் குரியாக உடையதாம். அப்பிரப்புக்கு பிதா ஆசாரியனும் மதா ஸாவித்திரியுமென்று கூறுகின்றனர்.

(கஎக.) வேதத்தைஅத்தியயனம்செய்விக்கின்றமையால் ஆசாரியனை பிதாவென்று (மனுமுதலியவர்கள்)கூறுகின்றனர். மேளஞ் சிபந்தன(என்றால் உபநயன)த்திற்குமுன் மாணுக்கனுக்குகர்மம்யாதொன்றுமில்லை.

(கஎஉ.) அவன் பிதிருகாரியத்திலன்றி (என்றால் சிராத்தகாலத்திலல்லாமல்) உச்சரிக்கக் கூடாதவனுவான். ஏனெனில் வேதத்தால் பிறப்பை(என்றால் இரண்டாம்பிரப்பாகிய உபநயனம்) அடையும் வரையில் சூத்திரனுக்கொப்பாவான்.

(கஎங.) அவனுக்கு (பய்யனுக்கு) கிரமமாய உபநயனம் ஆனபிறகே வேதாத்தியயனமும், அதின்பிறகு (முன்னுரைத்த) விதிப்படிக்கு பிரம்மத்தின்கிரகணமும், எனவிதிக்கப்பட்டிருக்கின்றது.

(கஎச.) எவ்வகை மாணுக்கனுக்கும் (உபனயனத்தில்)எவ்வகைத்தோல், எவ்வகை ஸூத்திரம் (யக்கியோபவீதம்)எவ்வகைமேகலை (உபனயனத்தில் நொசைப்புல்லாற்செய்து இடுப்பில கட்டிக்கொள்ளும்கயறு) எவ்வகைதண்டம் (அரசுபலாசுமுதலியகொம்பு) எவ்வகை வஸ்திரமும் விதிக்கப்பட்டனவோ அவையெல்லாவற்றையுமெவ்வகை விருதங்களிலும் உபயோகப்படுத்தவேண்டும்.

(கஎரு.) பிரம்மசாரியானவன்தன்னிடதபோவிருத்தியின்பொருட்டுஇந்திரிய சமூஹங்களைநிக்கிரகித்து ஆசாரியன் ஸமீபத்தில் வாசம்செய்கையில் கீழ்ச்சொல்லப்படும் நியமங்களை அநுஷ்டிக்கக் கடவான்.

(கஎசு.) பிரதிதினமும் ஸ்நாநம்செய்து பரிசுத்தனுகி, தேவருக்கும், பிதுருகளுக்கும், ரிஷிகளுக்கும், தற்பணத்தையும், தேவதைகளின்அர்ச்சனையையும், ஸமிதாதானங்களையும் (என்றால் சாலையிலும், மாலையிலும் அக்கினியில் ஹோமம்செய்தலையும்) செய்யககடவன்.

(கஎஎ.) அவன் (பிரம்மசாரி) தேன், மாம்ஸம், கந்தம் (சந்தனம் முதலியது) பூமாலை, ரஸமுள்ளபதார்தம், பெண்கள், புளித்துப்போன மதுரவஸ்துக்கள், ஜீவ

ஹிம்ஸை, முதலிய வனைத்தையும் தியஜிக்கக்கடவன்.

(கஎஅ.) அப்பியங்கனம் (என்றால் எண்ணெய்தேய்த்துக்கொள்ளுதல்) கண்ணுக்கு அஞ்சனம் போட்டுக் கொள்ளுதல், பாதக் கொரடு போட்டுக் கொள்ளுதல், கொடை பிடிததுக்கொள்ளுதல், காமம் (என்றால் புணர்ச்சியில் விருப்பம்) கோபம், பணத்தாசை, நர்தனம் (ஆடுதல்), பாட்டு, வாத்தியம் (இவ்வாறு மேல்குறித்த எல்லாவற்றையும் பிரமசாரி விடக்கடவன்.)

(கஎகூ.) சூதாடுதல், கலகம், சண்டை பொய், ஸ்திரீகளைப்பார்க்குதல், அவர்களை ஆலிங்கனம்செய்தல், அன்னியனுக்கு அபகாரஞ்செய்தல், எல்லாவற்றையும் பிரம்மசாரி விடக்கடவான்.

(கஅ0.) அவன்எங்கையாகிலும்தனியாய்நித்திரைசெய்யக்கடவன் : ஒருபொழுதும் தன்னுடையரேதஸை செலிக்கச் செய்யாம லிருககக்கடவன். ஏனெனில் அவ்வாறு (இந்தரியத்தை) செலிக்கச்செய்பவன் தன்னுடைய பிரம்மசரிய விருதத்தை நாசம்பண்ணி அவகீர்னி என்னும் பெயரைப்பெற்றவனாவான்.

மொழிபெயர்ப்பு.

மாதுருவாச்சல்லியம்.

மாதுருவச்சல்லியமானதுஅதைவெளிப்படுத்துங்காரணமாகிய சந்தர்ப்பங்களுக்கேற்றதாய் அளவற்றவிதங்களில் காணப்படுகின்றது. இவ்விதங்களனைத்தும், தாயைப்பிள்ளையோடு பந்தப்படுத்தும் இப்பாசமானது எவ்வளவுஆழ்ந்ததும் பிரயமானதும்என்பதை ரூபிக்கின்றன. தாயானவள் தன்குழந்தைகளைக் காக்கும்பொருட்டு எவற்றை தான் இழந்துவிடத்துணியமாட்டாள். தமது பிரயத்துக்காளாகிய இவர்களின் நன்மையைப்பாராட்டுங்கால் தமது யிரையும் திருணமாய்க்கருதுகின்றனர். இதற்கு நிதர்சனமாக சிலதிருஷ்டாந்தங்களை அடியில் வரைவோம்.

மார்ஷனெஸ், டிஸ்பட்ரா.

கிருஸ்தசகம் கஎஅஉ-வது-வருஷத்தில்சிசலித்தீவிலுண்டாகிய பயங்கரமான பூகம்பத்தைப்போது மார்ஷனேஸ்-டி-ஸபட்ரா என்னபேர்பெற்ற சீமாட்டி மெஷீனுபட்டணத்திலிருந்தனள். இவள் பூகம்பப்பிரர்ம்பத்தில் பயமுற்று மூர்ச்சை யடைந்தமையால், இவள்புருஷன் இவளைக் கோட்டைக்குள் கொண்டுபோய்விட்டு, தாங்கள் தப்பித்துப்போவதற்கொருபடகு சம்பாதிக்கச் சென்றனன். புருஷனில்லாதகாலத்தில்மூர்ச்சைதெளிந்த இச்சீமாட்டி, தன்குழந்தை பின்விடப்பட்டதென்றுகண்டு, உடனே அதிதுரிதமாய் தன்வீட்டுக்கு ஒடினாள். இன்னம் விழுந்துபோகாமலிருந்த வீட்டைக்கண்டு, உள்ளேசென்று குழந்தையிருந்த அரைக்குட்போய் தொட்டிலிலிருந்த குழந்தையைத்திடீரென கைய்யிலேந்தி அதிசந்தோஷத்தோடு திரும்பிவருகையில், தான்ஏரியமெத்தையின்படி விழுந்துபோனதைக் கண்டு இங்கு மங்குமாயோடி தப்பித்துக்கொள்ள எங்கும் வழிகாணுமல் கடையில் நின்ற ஒருசாளரத் தண்டையில்வந்து மார்பில் தன்குழந்தையைகட்டியணைத்துக்கொண்டு அடியில்நின்றஜனங்களை உதவிசெய்யும்படி வருந்திபிரார்தித்தனள்; அன்றியும்ஒருவரும்உதவிசெய்யவில்லை. இவ்வழகியதன்மையுள்ள தாயையும் குழந்தையையும்ஒருங்கே புதைத்துக்கொண்டு அவ்வீட்டின் மற்றபாகமும் விழுந்தொழிந்தது.)

நிருபங்கள்.

சென்னைவேதசமாஜம்.

ஐயா.

சென்னைவேதசமாஜத்தார், அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகராகிய, பரப்பிரம்மத்தைத்தியானபூர்வகமாக ஆராதிக்கும்பொருட்டு சபை கூடுகின்றனரெனக்கேட்டு, அதைக்கண்ணுற ஆவல்கொண்டிருந்தனன். சென்றவியாழக்கிழமையாகிய ஏப்ரல்மாதம் உகூ௨ ஒளஸ்துபாஷி ம-ா-ா-வெங்கடசாமி நாயகரவர்கள் வீட்டில் சபைகூடினார்கள். அவ்விடம் யான்கண்டதை யென் சக்திக்கிசைந்தவரையில்அடியில்வரைகின்றேன், இதைதயைசெய்து தங்கள்பத்திரிகையில் பிரசுரஞ்செய்வீர்களெனக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மேற்குறித்த நாயகரவர்களுடையமனையானதுபலவிதங்களில் வெகுவிநோதமாக அலங்கரிக்கப் பட்டிருந்தமையால் ச

ணைகூடியவிடம், கண்ணுக்குவெகுரம்மியமாக விருந்தது. சமாஜத்தைச் சேர்ந்தோரும் எனையோரும் சாயங்காலம், ௬-மணிமுதல் வரத்தொடங்கினர். சுமார் ௭-மணிக்கு ஆராதனைத்தொடங்கப்பட்டது; அப்பொழுதுயாவருமெழுந்துநிற்கசமாஜத்தாரில் ஒருவர் அடியில் கண்டவாறு ஸ்தோத்திரஞ் செய்தனர்.

ஓம்பரப்ரம்ஹணேநம:

ஓ அருள் நிறைந்தகடவுளே! நினது மகிமைகளைத் தொழுதேற்றும்படி இத்திருச்சபையில் யாங்கள்மீண்டும் கூடியது, நினதனுக்கிரகமே. எமையுற்ற தொல்லையாலும் கவலையாலும் மிகவருந்திய நாங்கள் நின்னையணுகித் துதிசெலுத்தும் நற்சமயம் என்று வருங்கொலென ஆவலோடு எதிர்பார்த்திருந்தோம். நினையணுகி நினது சாந்நித்திய வைபவத்தையுணர அருள்புரிவாய். ஓ பேரொளியே! பெருநட்பே! எங்கும் நிறைகின்ற பொருளே! நீஎமது கண்ணுக்குப் புலப்படுகிற யாவற்றிலும் வியாபித்து எமதுள்ளத்துங் குடிகொண்டனை. நினதருள் விலாசமுகாரவிந்தம் எங்கும் ஒளிவீச, நின்கருணாஹஸ்தங்கள் எவற்றையும், சூழ்கின்றன. நினது ஸர்வவியாபக சித்விலாஸத்தில் எமதான் மாக்கள்லயமாகி நின்தெய்வீகத்தையும் பாரிசுத்தியத்தையும் உணர்ந்திடவும் பிரதி துராசையும் உலக்வாஞ்சையும் ஒழிய எமதுணர்வும், கருத்தும், நின்பாதாரவிந்தங்களையே பற்றும்படிக்கும் உதவிசெய்வாய். நினது சன்னதியில் யாங்களடையுமானந்தம் க்ஷணமாத்திரையுடைய தாகாமல் எமதுவாழ்நாள் முழுதையும்இனியதாக்கி என்றும் எம்மை நின்ரக்ஷணச்சாயையிலிருத்தி முள் நிறைந்த உலகவழியில் எமைதீமையணுகாது நடாத்துவாய். துக்கமும், துன்பமும் உற்றுழி எமக்கு உற்சாகமாவாய். இவ்வுலக இருள்தன்னில் எமதொளியாய் நிற்பாய். இவ்வுலகமோகங்களினின்றும் இன்பங்களினின்றும் எமைக் காக்கும் கவசமும் நீயே, எமைக்குள் பரஸ்பர நேயத்தையும் அன்பையும் வளர்த்து எமது, வியவகாரங்களனைத்தையும் உசிதப்படுத்தி யாங்கள் நிஷ்களங்க சோதரவாஞ்சையை அடையவருள்வாய். நின்திருவுள்ளத்திற்கிசைந்த நன்மைசெய்வதில்யாங்களொருவரையொருவர் நேசித்துஉதவுவோமாக. நினையாஶ்ரயிப்பதிலேயேஎமதுவாழ்நாள் செலுத்திபரலோகநித்திய நிர்மல ஆனந்தங்களை யடைமுயல்வோமாக, ஓ அன்புள்ளபிதாவே! என்றுமெம்முடனிருந்துஎமது நட்புகோடாது வளரும்படிகிருபைசெய்வாயாக. யாவரும் சமயாதீத ஸத்திய மார்க்கரக்ஷணையைப்பெறுவாராக. நின்திரு நாமாமிருதம் ஒவ்வொரு நாவும் தெவிட்டாதுநுகர ஒவ்வொரகத்திலும் நீகுடிகொள்வா யாக. சர்வசாம்பிராச்சியநித்திய பிரபுத்துவம் நின்னுடையதாவதாக. ஓம்தத்ஸத்.

பின்பு இருவர்நின்று ஶ்ருதிவாக்கியங்களாகிய கானங்களையாவரும் ஆநந்திக்கும்படி ஸ்வரத்தோடும் பாடினார்கள். இக்கானங்கள் பாடிமுடியவே இவற்றையொருவர்தமிழில்வியாக்கியானஞ்செய்தார்.பின்புசங்கீதவாத்தியத்தோடு பிரம்மபரமானஒருகீர்த்தனைப்பாடினார்கள். மருபடியும்முன்போல்வேதாத்தியயனமும் உபன்னியாசமும் சங்கிதவாத்தியமும் செய்யப்பட்டன.பின்புஅச்சபையாரிலொருவர் "சத்திய மேவஜெயதே நான்ருதம்" என்னும்*வேதவாக்கியத்தைப்பற்றி பிரசங்கித்தார்இப்பிரசங்கம்முடிந்தவுடனே,மீண்டும்வேதகானங்கள்பாடி, அடியில்கண்டஸ்தோத்திரம்வாசிக்கப்பட்டது.

ஓம்பரப்ரம்ஹணேநம:

ஓ அன்புள்ளபகவானே! எமதுவாழ்நாள் வீணாளாகாமல் நின் ஏவலிற்செலுத்தும்படி மன்றாடுகிறோம். உனது நட்பென்னு மினியபாசத்தால் எம்மை நின்னோடு பந்தித்து எதனாலுமெம் மனம் நினைவிட்டு வேறுபடாதிருக்க வருளாய்.துன்பத்திலும், இன்பத்திலும், சுகத்திலும் பிணியிலும், உழைப்பிலும், உல்லாசத்தி

* இப்பிரசங்கத்தை யிப்பத்திரிகையினோர்பாகத்தில் காணலாம்.

லும், நித்தியகிருத்தியங்களிலும், இதரவியாபாரங்களிலும்,எச்சமயத்தும்என்றும்நினைவிடாதுபற்றும்படி எம்மை நின்னவராக்கிக்கொள்வாயாக. எங்கு எத்தொழிலில் பிரவேசித்திருந்தாலும், நினையே ஆஸ்ரயித்து நினையே தொடர்வோமாக. ஸ்ருஷ்டிப்பொருளொன்றையும்வணங்காதிருக்க எமக்கு நீபோதித்தருளியவாறு யாம்அதைப்பற்றி,எமது நட்பையும் முயற்சியையுந் துராகரித்து இவ்வுலகச் சிற்றின்பங்களை அவாவும்படிஏவுகிற ஒவ்வொரு மனோபாவனையாகிய விக்கிரகத்தையும் நிக்கிரகிப்போமாக. பொருளவா, பேரவா, ஆணவம், வீரியம், முதலிய உலகவின்பங்களாகிய விக்கிரகங்கள் முன்விழுந்து தொழுதேற்றும்படி செய்யும் விஷயாபேக்ஷயாகிய விக்கிராராதனத்தையும் முற்றுந்தியஜிப்போமாக. சகலபிரதிமாராதனையும் சம்பூர்ணமாக விட்டு நின்னையே எமதுகர்த்தனாகவும் எமதுண்மையான கடவுளாகவும்பற்ற உபதேசித்தருளுவாய். எமது ஜன்மஸாபல்லியமெல்லாம் நின்னையறிவதென்றேஎப்போது மறவாதிருப்போமாக. எமதுமனோவாக்குக்காயங்களை நின்சத்கீர்த்தனப்பிரபாவத்தில்தானே செலுத்துவோமாக. எமதுவாழ்க்கையெல்லாம் நின்சிந்தையால் மேம்பாடடையச்செய்வாய். எமது செய்கையனைத்துக்கும நினது நட்பேஅகப்பற்றும் புறப்பற்றுமாகக்கடவது. எமதுள்ளத்தின் எந்தமூலையிலாவது நின்னின்றும் வேறுபட்ட ஆசா பாசமொன்றுங் கரந்துறையுமாயின் அதைவேருடன்களைய உதவுவாய். ஆநந்தகரமாகிய நினது சாந்நித்தியமன்றி வேறெதையும் விரும்பாதவண்ணம் எமது பாசங்களெல்லாம் உலகத்தினின்றும் வேறுபட்டு நின்னிடத்தேவேரூன்றி செழிக்கும்படியருளாய். ஓகருணைகூர்ந்த கர்த்தனே யான் எனதென்னும் இருபற்றுகளுமற்று நின்னையேபற்றி சுத்தசைதன்னியநிலையாகிய ஆநந்தத்தில் வாழ்ந்துறங்க அருள்புரிவாய். ஓம்தத்ஸத்.

இதனோடு ஆராதனை முடிந்தமையால் சபை சுமார் ௮-மணிக்குக்கலைந்தது. இவ்விந்தையைக்கண்ட நானா மற்றவர்களும்ஆநந்தசமுத்திரத்தில் மூழ்கினவர்களாய்இனி நமதுநாடு சீக்கிரத்தில்விருத்தியடைவதில்சந்தேகமில்லையென சந்தோஷித்துவீட்டுக்குச்சென்றனம்.

இங்ஙனம்.
உண்மைவிரும்பியவோர்,
மயிலைவாசி.

உபந்நியாசம்.

ஸத்யவேஜயதே நாந்ருதம்.

சோதரர்களே !

நாமுத்தேசித்து தலையிட்டுக்கொண்ட காரியம் இனிநமக்கு சுலபசாத்திய மென்பதற்கு இன்றுநாம் நடாத்தும் நடைவடிக்கையே போதுமான நிதர்சனமாகும். இன்று நமக்கு நமதப்பன்அருளிய ஆநந்தானுபவமே அவரது பூர்ணகடாக்ஷத்தைப் பெற்றிருக்கின்றோம்என்பதற்குநிர்விவாதமான சாக்ஷியமாகும்.அன்றியும்நம்மில்சிலர்பராமுகமாயிருப்பதுமன்றிநம்மையும் நமதுசெய்கைகளையும் பலர்நிந்திப்பதையும்கருதி, நமதுஅபிமதங்களுக்குச் சம்மதித்தவராகிநமதுஸ்ரேயஸ்கரத்தை தேயேவிரும்பிய நமதன்பர்களுள்பலரும் அஞ்சி, அதைரியப்பட்டவர்களாகிநாம் தீர விசாரியாமல்கேவலம் ஆவலினாலும்நமதுவிஸ்வாஸத்தின் மிகுதியால்மாத்திரமேதலையிட்டுக் கொண்டகாரியம் அர்புதமானதாகவும் நமது சக்திக்கேலாததாகவுமிருக்கின்றது, இஃதுசாதித்து முடிப்பதற்கு சாதனமான நற்கருவிகளொன்றும் நம்மிட மில்லையென்றும் நாம் முடியாதகாரியத்தில் பிரவேசித்து வீண்நிந்தைக்காளாகி, நமக்கும்நம்மையுற்ற யேனையோருக்கும் பயன்படாதவர்களாகின்றோமென வற்புறுத்திச் சொல்லுகின்றனர். இவ்வாருரைப்போர் அதிசமர்த்தரும் சகலவிதத்திலும் மேம்பாட்டுடையவர்களும், நமது நன்மையை உள்ளூறஉகந்து உட்கொண்டிருககும் கனவான்களாயிருத்தலினால் இவர்கள்சொல்வதை நாம்எவ்வளவும் அவமதிக்கலாகாது. மற்றதை தீர்க்கமாயாலோசித்து, யினிநாம் முன்செல்லுதற்குமுன்பாக நமக்குள்ள பலாபலங்களைசெம்மையாக ஆராய்ந்து அறிந்துகொள்ள வேண்டியது நமதுநீங்கலாக்கடமையாயிருக்கின்றது.

ஆயினும் இவ்விஷயத்தில் விசேஷ மு

ற்சி செய்யாவிடினும் அதை நாம் முற்றும் அலக்ஷியம் செய்தவர்களென்றென்பதைமாத்திரம் நம தன்பர்களுக் கறிவிப்பது ஆவசியகமாயிருக்கின்றது. நாம்நமக்குஉபபலங்களாகக் கொண்டிருக்கும்பலசாதனங்களுள்ளும், பிரதானமானது யாதெனில் நமது தத்துவபோதினி பத்திரிகைச்குச் சிரோ பூஷணமாக பூட்டி யிருக்கும் "சத்தியமேவ ஜயதே நாஅன்ருதம்" என்னும் திவ்வியவசனத்தால் விளக்கப் படுகின்ற கருவியே. அஃதாவது சததியமே. நமதுகாரியசித்தியின்பொருட்டுசத்தியத்தைவிடவேறொருசாதனம் நமக்குவேண்டியதில்லை யென்பதுதீரர்களுக்குக்கரதலநெல்லிக்கனிபோல் நிஸ்ஸந்தேகமாய் விளங்கியபோதிலும் இதன்அளவிறந்த வன்மையை அநேகர் அறியாதவர்களா யிருக்கின்றனர், அறிந்தும் பாராட்டாத வர்களாயுமிருக்கின்றனர். ஆகையால் இச்சமயத்தில் எனது சக்திக்கியைன்றுவாறு இச்சத்தியத்தின் மஹிமையைப்பற்றி சிலவார்த்தகளைச் சொல்லத் துணிகின்றனன். நமதப்பனுகிய பேரருட்கடவுள் எனதுபுன்வாக்கிலிருந்தும் சத்தியமே வெளியாகும்படி உதவிசெய்வாராக!

இவ்விஷயத்தைப்பற்றி சர்ச்சிக்குங்கால் முதலில் சத்தியம் இன்னதென்றும், பிறகு அச்சத்தியாசத்தியங்களின் பலாபலங்கள் இன்னவைஎன்பதை ஒருவாறு எடுத்துரைக்க முயலுவோம்.

நமதுகொள்கையை விரும்பியும்,நமதுசெய்கையை வெறுக்கும் நமதன்பர்கள் பலருடைய முக்கியமானஆக்ஷேபணையைச் சற்று ஆலோசிக்குமிடத்து, இவர்கள்சத்தியமென்றுமொரு பொருளிருப்பதாக நம்புகின்றுரோ என்னும்சங்கை ஜநிக்கிறது. இவர்கள் பிரதானமாக வாதிப்பது யாதெனில்; உலகத்தின் கண்பலதேசங்களிலும் பலகாலங்களிலும்பலவித அபிப்பிராயபேதங்கள்தோன்றி விருத்தியடைந்து, அந்தந்த தேசத்தார் அந்தந்தகாலத்தோர் அவரவர்களுடையமதமே பிராதனமென்றும் சத்தியமென்றும்நம்பிநடித்தனர். அவர்களுடைய நடைவுடைபாவனை அவரவர்களுக்குச் சிறந்ததாய் தோற்றும். இதற்கு விரோதமானவற்றுல் அவர்களுக்குவருத்தமுண்டாகின்றது. ஆகையால் புத்திமான்கள்"ஊருடன்கூடிவாழ்"என்னும் பழமொழிப்படி, உலகநடை அனுசரிக்கவேடுமேயன்றி, உலகநடையை நிந்திக்கவாவது அதற்கு விரோதமானநடையைஅனுஷ்டிக்கவாவது பயரங்கமாய்முயல்வார்களானுல்உலகத்தரால் வெறுக்கப்பட்டும் நிந்திக்கப்பட்டும், உலகத்தாருக்கும்பயன்படாமல்போவாரென்கின்றனர். ஆயினும்உள்ளதைச்சொன்னுல்நொள்ளைக்கண்ணிக்குநோப்பாளம்என்பதுபோல்;பிறர்குற்றங்களை ஒடுத்துரைப்போமானுல் இஃதிஒருவரும் சகிக்கக்கூடாதகாரியமே, அவ்வாறு செய்வதும் அதர்மமே. ஆயினும பிறர் நன்மையின் பொருட்டு அவரிடம்பொரிந்தியதீமைகளையும்குறைகளையும் அவர் அறியும்படி செய்வது நமது கடமையாயிருத்தலால்,இதனுல்நமக்கெவ்வளவு நிந்தைவந்தபோதிலும்சஹித்துநமதுகடமை நடத்தவேண்டுமேயன்றி பின்வாங்கஒண்ணுது. நமதுவார்த்தைகளால் நொந்து வீணே நம்மை நிந்திக்குமிவர்களே, பின் நமதெச்சரிகையினுல் விழிக்கப்பெற்று, தமதுகுற்றங்களைக்களைந்து சீர்திருத்தமடைந்து சத்தியத்தைபாராட்டி ஆநந்தமடையுங்கால் நம்மை இகழ்ந்ததற்காக மிகவிசாரப்பட்டு நம்மை மிகப்புகழ்ந்து நாம்செய்த உபசாரத்தைநன்குமதிப் பார்களென்பதற்குச் சந்தேகமில்லை. அன்றியும் இப்பொழுது நாம்செய்வதெல்லாம் நன்கென நாமெப்படி மதிக்கலாம், இனியுண்டாவதாக ஊகிக்கப்படும் நன்மை பாராடடி அளவிறந்த ஜனங்களுடைய மனதை நோவச்செய்வது தருமமல்லவெ, நன்மை தீமைகளை யார்கண்டார்கள், பிரதானமாய் வழக்கமல்லவோ, நன்மை தீமைஎன்னும் வியவிஸ்தைக்குக் காரணமாயிருக்கின்றது, நாம் சிறுவயதுதொடங்கி இன்னது நன்மை இன்னதுதீமையென்று பழக்கத்தாலல்லவோ கற்றுக்கொள்ளுகிறேம், நமது அறிவெல்லாங்கூடி வழக்கமாயிருக்கையில், நம்மைச்சுற்றிலும் உள்ளவர்கள் மனம் வீணேவருந்தி துடிக்கும்படி, சீர்திருத்தமுயன்று நாமேன் பாவத்துக்குள்ளாக வேண்டுமென்கினறனர்.இவ்வாறுவசனிப்போரைநாஸ்திகரென்றழைக்காவிடில் வேறெந்தநாமத்தால்குறிக்கலாகுமோயான அறிகிலேன்,இவர்கள் வழக்கத்தையே தெய்வமாகத் தொழுவார்களபோலும், வழக்கமின்றி வேறுநன்மைதீமைகளில்லையென சாதிப்போர்போலும். இவர்களுக்கனுகூலமாய், இஹத்தில்நமது சுகத்துக்கெது வனுகுணமா யிருக்கிறதோ அதுவே நன்மை மற்றது தீமை யென்று வாதிக்கும் சிலகனவான்களு மிருக்கின்றனர். ஆகையால் இகத்தில் நமது சுகதுக்கங்களுக்குக் காரணமாயிருப்பதாக யோசித்து மனிதர் ஏர்ப்படுத்திக்கொண்ட வியவஸ்தையைவிட உலகப்பயனைச் சற்றுஞ்சராதவேறு நன்மையாவது, வேறு சத்தியமாவது உண்டோஎன்பதை முதலில் விசாரிக்கவேண்டிய தவசியமாயிருக்கின்றது.

ஒவ்வொருசெய்கையிலும்அதன்பயனையறியாமல்அதுநன்மையென்றும்தீமையென்றும்

சொல்லக்கூடாதெனஉரைத்தபோதிலும், பயன்களைச்சற்றுங்கருதாமலே, நன்மைதீமைகளையுணரும்படியானசக்தியியற்கையாகக்கடவுள் நமக்களித்திருக் கின்றனரென்பதுசற்றுதீர்க்காலோசனைசெய்யுமொவ்வொருமனதுக்கும் வெளியாகுமென்று நம்புகின்றேன். ஆயினும் இதைநன்றாக அறிவிக்கும்பொருட்டுஇயற்கையாகநமது மனதுசிலவற்றை யாதொரு காரணமின்றியும்பயனைக்கருதாமலும், விசேஷமாகக் கருதிவிரும்பும் சிலவிஷயங்களையெடுத்துக்காட்டுவோம்.சிலப்பிரதேசங்களை அதிகவழகானவையென்றும்மனோரம்மியமானவையென்றும் புகழ்ந்துகொண்டாடி மற்றவைகளை இகழுகின்றோமல்லவா. பசுமையற்ற வெறுங்கல்லாலாகிய பெரும்பருவத்தைக்கண்டு வெறுக்கும் நமதுகண்களே அழகியவிருக்ஷங்களோடும் நூறுவிதபுஷ்பச்செடிகளோடும் மலர்ந்திரானின்ற குன்றத்தைக்கண்டு ஆநந்திக்கின்றன வல்லவா? ஒவ்வொருபிரதேசமும் அதனால் விளையும் சுகத்தைக்கொண்டும் பயனைக்கொண்டுந்தான் அது அழகானப் பிரதேசம் அல்லது அழகற்ற தேசமென சொல்லப்படுமென்பர்களாகில் இது அனுபவத்துக்கு விரோதமாகின்றது. விசேஷசரீரசௌக்கியத்தைப்பற்றியே ஒருதேசத்தை விரும்பியபோதிலும், நாம்யாதொருபயனும் அடையக்கூடாத வாநாந்திரகாக்ஷிகளுள்ளும் சிலவற்றை அழகானவையென்று சிலவற்றை அழகற்றன வென்றும் மதிக்கின்றோமென்பதற்குச் சந்தேகமுண்டோ. மேலும்நாம்ஆடையாபரணங்களினால் அழகைச் செய்து கொள்ளுகிறோமே, ஒருதேசத்தார் அழகென்றுநினைப்பதைவேறுதேசத்தார் நிந்திக்கிறார்களே இதுபழக்கமல்லவாவென்றால், மனிதர் செயர்க்கையால் பெரும்அழகு எவ்வாறிருப்பினும், இயற்கையாயுள்ள அழகை எங்கும் ஒருவாறேமதிக்கின்றனர். புருஷருள்ளும் பெண்களுள்ளும்,சிலர்விகாரத்தைஇச்சித்தபோதிலும், மனிதசாமான்னியரும், வடிவங்களுள்இன்னதுஅழகு இன்னதுவிகாரமென்று அறிந்துகொள்ளுகின்றனரல்லவா. அழகானமுகத்துக்கும் விகாரமுகத்துக்கும் பேதமென்ன; ஒன்றையேன் இச்சிக்கின்றோம், மற்றொன்றை யேன் வெறுக்கிறோமெனும் கேள்விக்கு என்னவிடை யுரைககலாகும். இன்னது அழகு இன்னது விகாரம் என அறிந்துகொள்ள கடவுளால் நமக்கு இயற்கையாககொடுக்கப்பட்டிருக்கும் உணர்ச்சியன்றி வேறு சாதனமுண்டே? அழகிய முசமுடையோர் பெரும்பாலும் பெருந்தன்மையுடையவர்களாயிருப்பதுண்மையாயினு, இப்பயனைக்கருதிதான் அவர்களை அழகுள்ளவர்களென்கிறோமென யாராவது வாதிக்கத் துணிவார்களோ. ஆகையால் நமது கண்ணானது இயற்கையாகவே சிலவற்றைஅழகென்று விரும்பி சிலவற்றை விகாரமென வெறுக்கின்றதென்பதற்குச்சந்தேகமில்லை. இதுநிற்க, நமதுநா சிலவஸ்துக்களை ருசியுள்ளவையென விரும்புவதையும் மற்றவைகளைக் கசப்பெனவெறுப்பதையும் சற்றுயோசிப்போம். பொகையிலை அபினி முதலியவற்றை வெகுநாளாய் அப்பியசித்து வருவோர் அவைகளை விரும்பியபோதிலும், எப்படிப்பட்டதுர்வழக்கமுடையோரும், சக்கரை தித்திக்கின்றது எட்டிகசக்கின்றதென்பதை அறியாமல் போகமாட்டார்களல்லவா? சக்கரைக் கற்கண்டு தேன் முதலியவை நமது சரீரத்துக்கு சுகத்தை யுண்டாக்குவதை யறிந்திருப்பதினாலும், பொகையிலை வேம்பு எட்டடி, அதற்கு தீங்கை யுண்டாக்குமென அறிந்திருப்பதினாலும், முந்தியவற்றை தித்திப்பென்றும், பிந்தையவற்றைக் கசப்பெனறும்சொல்லுகிறோம் என்றால் யாரேனும் நம்புவார்களோ? ஆகையால் வஸ்துக்களுடைய தன்மையை இயற்கையாக அறிந்துகொள்ளும் படி கடவுள் இயற்கையாகவே நமது புலன்களுக்கு சக்தியுண்டாக்கி யிருக்கின்றா என்பது நிஸ்ஸந்தேகமாய் விளங்கும். இதைப்பற்றி சற்றுதீர்க்காலோசனைசெய்வோனாமால் இவ்வாறே நமது செய்கைகளின குணகுணங்களையும்அறிந்துவிரும்பவும்வெறுக்கவும் அறிவைகடவுள் அளித்திருக்கிறாரென்பதையூகிக்கலாம்.அன்றியும்சத்தியத்தைசத்தியத்தின் பொருட்டே விரும்புவோரும், நன்மையை நன்மையின்பொருட்டே விரும்புவோரும் எண்ணிறந்தவர் உலகத்தில் உனராதலின் இதற்குவேறு காரணம் செப்பவேண்டியதில்லை. அழகானவடிவத்தை யேன் நீயிச்சிக்கிறாய என்றால் இதற்குநான் என்ன விடையுரைக்கக்கூடும். அது அழகாதலினால்தான் மதிக்கின்றேன், அழகைமதிக்கும்படியான தன்மை கடவுளெனக் குண்டாக்கியிருக்கின்றனர் என்றல்லவா விடையுரைக்கவேண்டும. அவ்வாறே சத்தியத்தை யேன்மதிக்கிறீர் என்பீர்களாயின், அதுசத்தியமாதலினால்தான் மதிக்கின்றேன், சத்தியத்தையறிந்து மதிக்கும் தன்மைகடவுள் நமச்கு அருளியிருக்கின்றார், என்றல்லவா விடை யுரைக்கவேண்டும். சத்தியத்தைமதிக்குந் தன்மை இயற்கையாகநமக்குள வாயின் மனிதர்களேன் பெரும்பாலும் அசத்தியத்தைவிரும்புகின்றனரென்று வினவப்படலாம். ஒருவன் காமாவிகாரத்தினால் ஏவப்பட்டவனாகி சர்வவிகாரமுள்ள ஒருஸ்த்ரீயின் சங்கததைஇச்சித்துமிகவரு

ந்துவதினால், அவன் அழகைமதித்தவனன்றென்று சொல்லலாமோ. அவ்வாறுமனிதர் தமது தத்காலபிரயோஜனங்களைக் கருதி அசத்தியத்தை விரும்பியபோதிலும், சத்தியத்தின்பேரழகை அறியவாவது மதிக்கவாவது இல்லையென்று சொல்லலாகுமோ. அசத்தியத்தைப்பாராட்டும் திருடர்கூழாங்களிலும் சத்தியம் மதிக்கப்படுவதும் அசத்தியம் வெறுக்கப்படுவதையுங்காண்கின்றோம். இவ்வியற்கையான நல்லறிவுமனிதருக்கில்லையென்று வாதிப்பவர்கள் நமதான்மாவினுடைய இயற்கையான பேரழகை மறுத்தவர்களாகி அதினிடத்து விகாரத்தை ஆரோபித்து அதன்தன்மையை முற்றும் அழிப்பவர்களாகின்றனர். மக்களுள் சரீரவடிவத்தால் ஒருவரைப்பார்க்கிலு மற்றொருவர் அதிக அழகுடையவராக மதிக்கப்படுகின்றனர். அவ்வாறிருக்க, நமதான்மாக்களுடைய தாரதம்மியங்களையோசிக்குமிடத்துஒரு ஆன்மாவைமற்றதினின்று சிரேஷ்டமானதென்று கருதயேதாவதுதகுந்தமுகாந்திரமுண்டாவென்பதை சற்று விசாரிக்கவேண்டாமோ? உலகத்தார் ஒருஆன்மாவை மற்றொன்றைப் பார்க்கிலும் அழகிய தன்மை யுடையதாக பிரஸ்தாபிப்பதை நாமெங்கும் கண்டிருக்கிறோம்.

அந்தணரென்போர்அறவோர் எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலால்.

எனநாயனாரும் செப்பியிருக்கின்றார். எத்தேசத்தினுடைஎந்தகாலத்துசரித்திரத்தைஎடுத்துப்பார்க்கிலும், இக்காலத்தோர் நடைகளைப் பிரத்தியக்ஷத்தில் கவனித்தாலும் இதன்உண்மைவிளங்கும். ஆகையால்உலகத்தார் சிலஆன்மாக்களை மற்றவைகளைப் பார்க்கிலும் விசேஷித்தஅழகை யுடையனவாக கருதுவதுண்டென்பதை யொருவரும் ஆக்ஷேபியார்களென நம்புகிறேன். இவ்வழகிய தன்மைக்குக்காரணம்யாதென்று மாத்திரம் விசாரிப்போம். மனிதர் ஒருவரையாது நிமித்தம்மதித்துப் புகழ்கின்றனரெனில்; உலகத்தில்ஸ்வகாரியதுரந்தரனாய்தன் பிரயோசனத்தையேகருதிநடப்பவனைஒருவனாவது மதித்துக்கொண்டாடியதில்லை. பரோபகாரஞ்செய்யப்பட்டவனை எல்லோருங்கண்டு மகிழ்கின்றனர். பரமலோபி யாயிருப்பவனும் தாதாவின் தன்மையை மெச்சாமல் போகான். ஒருவன் தன்பிராணனை காப்பாற்றும்பொருட்டு மற்றொருவனை கொல்லுவானாகில், அவனையொருவரும் தூஷியாவிடினும், அவனிடத்தில் யாதொரு சிறந்தகுண மிருப்பதாக கொண்டாடமாட்டார்கள். மற்று, ஒருவன் ஏனையோன் பொருட்டு தன்பிராணனை விடுவானாகில், அவனை மேலானவனென்று கொண்டாடுவதுமன்றி தெய்வத்தோடொப்பிடுவார்கள். இஃதுபயனை யுன்னிதான் செய்யப்படுகிறதென்னலாமோ? ஒவ்வொருவனும் தன்பிராணனைக் காப்பாற்றிக்கொள்வது எல்லாருடைய பொதுக்காப்புக்கு அத்தியாவசியகமல்லவா? அன்றியும் மனிதர் எல்லாருடைய பொதுக்காப்புக் கவசியமானதற்காத்தலை விசேஷமாக கொண்டாடாமல் மற்றொருப்பிராணியின்பிரயோஜனம்பொருட்டுமாத்திரம் செய்யப்படுந்தற்கொலையைப்புகழுவானேன்? ஒருபொய்சொல்லத்துணியாமல்தனதுநாட்டையும் பெண்டுபிள்ளைகளையுமிழந்துசொல்லொணா துன்பங்களுக் காளாகியஅரிஸ்செந்திரனைப் புகழாதோர்உலகத்திலுண்டோ? ஒரு சத்தியவானுடைய பிராணனைக்காக்கும்படிப்பொய்சொல்லத்துணிபவனைஎல்லாருங்கொண்டாடியபோதிலும், உதரபோஷணார்த்தம்பிரதிதினமும்பொய்சத்தியம் செய்பவரை தூஷிக்கின்றன ரல்லவா? உதரபோஷணார்த்தம், பிறன்பொருளைத்திருடுவோனை யாதொருவரும் வெறுக்கினும்பிறருக்கு நன்மைசெய்யக் கருதிகொள்ளையடித்தத்திருமங்கையைப்புகழ்வோர் எத்தனைபேர். கிருஷ்ணனைப்போல் லோலனாகி ஆயிரம்பெண்களோடு புணர்வோனை ஒருவராவது கொண்டாடாவிட்டாலும்,இராமனைப்போல் ஏகபத்தினீவிருதம் பூண்டமகான்களை மகிழ்ந்துபூஷிப்போர் எத்தனைபேர். இவற்றைஎல்லாம்சற்றுயோசிக்குங்கால், சத்தியம்,நீதி,தூய்மை, தயைமுதலியவை கேவலம்பிரயோசனத்தைப்பற்றியதல்லவென்றும் இவைகளே ஆன்மாவின் பேரழகுக்குக்காரணமாகிய சின்னங்களென்பதையும்எளிதில் உணர்ந்துகொள்ளலாம். ஆகையால் பயனை பாராட்டாமலே, சத்தியமென்பதொருபெ*ருளுண்டெனவே கொள்ளவேண்டும்.

சத்தியம்என்பதுயாது இதையெவ்வாறறியலாமெனில், இதையறிவது சுலபமாயினும், இதைவரையிட்டுக்கூறுவதுமாத்திரம்மகாப்பிரயாசையாயிருக்கின்றது. அழகுள்ளஒரு பெண்ணைக்கண்ட எல்லோரும் அவள் அழகையறிந்துகொள்வது சுலபமாயினும்அவ்வழகுஇப்படிப்பட்டதென்றுவார்த்தைகளால் தெரிவிப்பதுஒருவருக்கும்சுலபசாத்தியமன்று. அவ்வாறே சத்தியத்தைக்கண்ட மாத்திரத்தில் ஒவ்வொருஆன்மாவும் வேறுமுயற்சியின்றி அறிந்துகொண்டாடுமாயினும், அதைப்பகுத்துக்கூறுவது அசாத்தியமாம். ஆயினும் அழகை யின்னதென்று தனியேகூறுவது பிரயாசையாயினும், அஃது இன்னின்னபொருளில் விளங்குமென்று காட்டலாமல்லவா?

அவ்வாறே சத்தியத்தை ஒருவாறு விசிதப்ப டுத்த முயலுவோம். சத்தியமானது பிரபஞ்சத்தின் கண்ணும் நமது காரியங்களினிடத்தும் விளங்கும். ஆகவே அஃது இரண்டுவகைப்படும். பிரபஞ்சத்திலுள்ள சகல பொருள்களின் ஸ்வபாவதருமங்களையும் உள்ளபடி அறிவதொன்று; நாமறிந்த சகலத்தையும், சகலகாரியங்களிலும், நமது மனோவாக்குக்காயங்களால், ஒளியாமல் வெளியிடுவதொன்று. இவ்விரண்டுக்கும் மத்தியாக, மற்றொரு பகுதியும் உளதென சிலர்கூறலாம். அஃதாவது, நாம்அறிந்தவற்றிற்குத் தக்கபடி நமதுவாழ்க்கையில் நிற்பதேயாம். ஆயினும் இஃது ஒருவாறுபின்சொல்லியபாகத்தில் சேர்ந்திருப்பதால்பிரத்தியேகமாகச்சொல்லப் படவேண்டுவதில்லை. சத்தியத்தின் இப்பலபாகங்களைப் பற்றியும் பிரசங்கிக்க இன்று அவகாச மில்லையாமால், இஃதை மற்றொருநாளில் செய்யவேண்டியதாயிருக்கின்றது. ஆகவேஇத்துடன்நிருத்தி, இன்றுநடக்க வேண்டிய முடிவான ஸ்தோத்திரங்களை வாசிக்கத் தொடங்குகின்றேன்.

நிருபம்.

ஓம்பிரும்மணேநமஃ

பரப்பிரும்ம பஞ்சரத்தினம்.

நேரிசைவெண்பா.

செஞ்சொல் சுருதியுரைசீரார் மாப்பிரு
ம்ம
பஞ்சரத்தினம் பகரபண்புடனே-கஞ்சம
லா்,
அன்பாக த்துரையுமப் பரனையெப்போ
தும்,
நம்புடான்னேநயந்து.

ஆசிரியவிருத்தம்.

அருட்பிரமமாயிருந்தக்கணமுன்னியே,
ஆகாயவாயுவங்கி,
அப்புமண்ணுக்கிச் சதாசிவமகேஸ்வரன்,
அரனரியயனென்னவே,
பெருமையாய்ப் பெயர்கடந்தொன்றுடனென்று,
பிரியாமலே யிணக்கிப்
பேர்தேவர்மக்கள் விலங்குபுள்ளூர்வன,
பெருநீர்வனதாவரம்.
இருவினைகளால்படைத்தவரவர் கருமத்
துக்குக்,
கீடாகபலனளித்தே,
ஈறிலாதென்றைக்கு முள்ளநின் பெரு
மையை,
எளியேநியம்பவசமோ,
பருவமழைபோலவே யன்பருக் கருள்
பொழி,
பரப்பிரும்மமானவமுதே.
பண்பான சுருதிகழும், வம்பானவரச்சை
சிலர்,
பணிவதாலென்னபலனே. (க)

ஆதிநடுவந்தமில னகிலாண்டகோடிகள்,
அளித்துகாத்திறுசெய்யும்,
அன்பாருநித்தியன் விஸ்வரூபன்பாவும்,
அறிபவன் வெகுசூட்சுமன்,
ஏதமில்லாதவன் சகலபூதங்களில்,
எள்ளினுளெண்ணெய்போல்வான்,
ஏகுவான் காலின்றி எவ்விதக்கையின்றி,
இணையிலாத்தொழில்புரிகுவன்,
காதின்றிகேட்பவன்கண்ணின்றி பார்ப்ப
வன்,
கருதுவோர்மலரகத்தில்,
கருமழைப்போலவே ஞானத்தைபொழி
யுமக் கடவுளைநம்புமனமே,
பாதகம்அணுகாதுநீதமேயோங்கசெய்,
பரப்பிரும்மமானவமுதே,
பண்பானசுருதிகழும், வம்பானவர்ச்சை
சிலர்,
பணிவதாலென்னபலனே. (உ)

மாயைமுதலென்பார்கள் மாசதாசிவமெ
ன்பர்,
மகேச்சுவரனென்பர்சிலபேர்.
மன்னுமரனென்பர்சிலர் வாழுமரியென்
பர்சிலர்,
மலருளோனென்பர்சிலபேர்.
நேயவிந்திரனென்பர் மார்த்தாண்டனெ
ன்பர்சிலர்,
நிலவுதரனென்பர்சிலபேர்.
நிதியானை முகனென்பர் வேல்முருகனெ
ன்பர்சிலர்,
நேர்மதனனென்பர்சிலபேர்
ஆயும்வேளையிலிவர்க ளுளரரொனிற் சிரு
ட்டியாம்,
ஆன்மகோடிகளாகுமால்,

அன்னோரைபூசித்துநினையேமறந்தோர்க
ள்ஆத்மசக்தியேய்துமோதான்,
மாயுமடையென்னவே யன்பருக் கருள்
பொழிபரப்பிரும்மமானவமுதே,
பண்பானசுருதிகமும்,வம்பான வரச்சை
சிலர்,
பணிவதாலென்னபலனே. (௩)

சிருட்டிதிதிசங்காரமோக்ஷசர்வக்கிய,
சீர்சர்வ சக்தமயமாய்,
செப்புமானந்த சத்ஸ்வரூபவதிருசிய,
திகழத்துவதீயஏக,
அருட்பரமபுருஷனே, திரி லோகவியாபி
யே, யாவற்றையும்விளக்கும்,
அன்னையேதந்தையேஎன்றுள்ள முருகி
யே அனுதினமுந்துதிசெய்வோர்க்கு,
இருளறஞானசுடரோங்க வேநன்மார்க்க
மெய்துவைத்தன்னோர்களே,
இணையிலாமுத்தியிலிருத்து முன் பெரு
மையைஎளியேனியம்பவசமோ,
பருதிமுதலாந்தேவரறியொணு மூலனே
பரப்பிரும்மமானவமுதே !
பண்பானசுருதிகமும், வம்பானவர்ச்சை
சிலர்,
பணிவதாலென்னபலனே. (௪)

இளமைமூப்பின்றியு மிறப்பிறப்பின்றியும்
எங்கும்நிறைந்திருக்கும்,
ஏகனேயோகனேசீலனேகோலனே,
இன்பனேபண்பனேசீர்,
வளவனே வுளவனே பரமனே கருண
னேமன்னனேசோர்னனேயோர்
வாலனேசாலனேதாலனேபாலனே,
வண்ணனே திண்ணனேவாழ்
அளவிலாவத்தனே முத்தனேநித்தனே,
ஆரவித்தனேசுத்தனே,
அடியவரகத்தினினடித்திடுங்கடவுளே,
ஆனந்தநெடியவாழ்வே,
பனிகுரும்நின் பெருமைவாழ்த்தவே ய
ளித்தருள் பரப்பிரும்மமானவமுதே.
பண்பானசுருதிகமும், வம்பானவரச்சை
சிலர்,
பணிவதாலென்னபலனே. (௫)

இஃது—பெங்களூர்,
ஆ, ஐயாசாமிமுதலியார், இயற்றியது.

ஞானமார்க்கம்.

சத்தியமே சக்தி, தத்துவமே சித்தி
மெய்யேவெல்லும் பொய்யல்லவெனு
ம் தத்துவபோதினிக் கர்த்தரவர்களுக
கோராயிரம் விண்ணப்பம்.

ஐயா! சிரியோர்செய்த சிறுபிழையெ
ல்லாம் பெரியோராயிற் பொருப்பதுகட
னே யென்கிர மொழிப்படி இதநடியிற்சி
றியனெழுதுஞ்சங்கதிகளிலென்ன குற்ற
மிருந்தபோதிலுமன்னித்து பிழைதிரு
த்துவதுடன் தமது மேன்மையானக் க
ருத்தைப்புகட்டி அச்சிட்டு விளம்பரப்
படுத்துவீர்களென்று நம்புகிறேன்.

திருக்குறள்.

வீழ்நாள்படாம நன்றாற்றினஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங்கல்.

யென்னும் வாக்கியப்படி மோக்ஷம்அ
டைய யிச்சிக்குங்கால் உபதேச கலையெ
ன்னும் ஞானமார்க்கத்தாலேயே தேகத்தி
ற்குவரும் உயிர்வேதனைகள் பனிரெண்டு
ம்நீங்கி பிராணன் அபானவழியாகச்செல்
லு மவஸ்தைஎன்னும் நரகமெய்தாமால்
மோக்ஷ நிலைபெறலாமே, வீணுக்கு அப்
பியசிக்கப்படும் மந்திரகலை தந்திரகலை மு
தலியவற்றால் ஈஷத்தேனும் பிரயோஜன
முண்டாகுமோ.

சங்கராசாரியர்.

கோடிபலநூலறிவு வேதமுரைபேசினுங்
குருபாதம்வெளியாகுமோ.

ஔவைக்குறள்.

நல்லனநூல்பலகற்றாலுங் காண்பரிதே
எல்லையிலாத் சிவம்.

என்று வாக்கியமிருப்பதால் ஞானமா
ர்க்கத்தாலன்றி வேதாகம நூற்களைப் படி
த்துப் பாராயணஞ் செய்வதினால் பஞ்ச
பாதகத்தொழிலின் மூலமாய்ப் பத்தித்
தொடரும் பவரோகம் நம்மைவிட்டு நீங்
கமாட்டாது.

ஔவைக்குறள்.

அருளினாலன்றி யகத்தறிவில்லை
அருளின்மலமறுக்கலாம்.
சிந்தையுள்நின்ற சிவனருள்பெற்றக்கால்
பந்தமாம் பாசமறும்.

ஒழிவிலொடுக்கம்.

சகலகேவலமுந் தாக்கறுப்பான்மூடு
பகல்விளக்போ ருச்சிப்படிகந்-தகவைத்தா
முட்டியுறக்குவதுநாமே நம்முடகலப்பு
நட்டமொழி யென்றருளினன்.

கருத்து.—சகலகேவலங்களையு மருட்போதத்தாலன்றி ஆன்மபோதத்தால்நீக்கப்படாதென் றறிவித்தல். அருட்போதமாகிய ஞானயோகத்தை அனுசரித்த ஆசான்மூலமாய் மேலாலவத்தை சுத்தாலவத்தை கீழாலவத்தையென்னும் அல்லது சாலபந்திப்பு ஒட்டியாணபந்திப்பு மூலபந்திப்புயென்னு மூன்றுவித பந்திபினுலுண்டாகுங் காரியமுணர்ந்து இவைநீக்க சிவனருளே சாதனமென்றறிக.

ஔவைக்குறள்.

நரம்பெனுநாடி யிவையினுக்கெல்லாம்
உரம்பெறுநாடி யொன்றுண்டு.

கருத்து.—நரம்பென்று சொல்லப்படும் பல ஸ்தூல நாடிகளைப்பார்க்கிலும், அதிவன்மையுடைய சூக்ஷ்மநாடி யொன்றுண்டு. அஃதேஞானவழி.

ஔவைக்குறள்.

கூடகமான குறியெழுத்தைத் தானறியில்
வீடகமாகும்விரைந்து.
வீடசமாக வீழ்ந்தொல்லை வேண்டுமேல்
கூடகத்திற் சோதியொன்றுண்டு.

கருத்து.—கூடகமான பரமாத்மாவைக்குறிக்கும் பிரணவத்தின் தன்மை யறிந்தால் வீடுவிரைவில்கிட்டும்.

ஔவைக்குறள்.

நாபியகத்தே நலநுறநோக்கிடில்
சாவதுமில்லை யுடம்பு.
கண்டத்தளவிற் கடியவொளிகாணில்
அண்டத்தாராகுமுடம்பு.
துரியங்கடந்த சுடரொளியைக்காணில்
மரணம் பிரப்பில்லைவீடு.

கருத்து.—இம்மூன்றிடங்களில் நிலைகொண்டதாக சொல்லப்படும், ஆத்மஸ்வரூபத்தை யறிந்தால் இஹபரசுகங்களொருங்கே கைகூடும்.

ஔவைக்குறள்.

குவித்துமனத்தை குவித்துள்ளேயோங்கில்
செவித்துப்பெருவதெவன்.

கருத்து.—அவ்வாறறிந்து ஆநந்தமடைய சாதனம், மனதைக்குவித்து யுள்நோககுதலென்ப திதனுல் காட்டப் பட்டது.

ஔவைக்குறள்.

அடிமிசைவாய்வு வடுத்தடித்தேகி
முடிமிசை யோடுமுயல்.
உண்ணுடிவாய்வு வதனையுடநிர்பர்
விண்ணேடுமெள்ளவிடு.
வாசலீரைந்து மயங்கியவாயுவை
ஈசன்தன் வாசலிலேற்று.
போகின்றவாய்வு பொருந்திற்சிவமொக்கும்
தாழ்கின்றவாயுவடக்கு.
மயிர்க்கால்வழியெல்லா மாய்கின்றவாயன்
உயிர்ப்பின்றி யுள்ளேபதி.
ஈரைந்தெழுபத் தீராயிரநாடியுரு
சேருமின் வாய்வுச்செயல்.
வாயுவாய்மன்னுயிராய் மற்றவற்றினுட்பொருளாய்
ஆயுமிடந்தானேசிவம்.

இவற்றால் சரீரத்திலுள்ள இந்திரியங்களின் சேஷ்டைகளுக்கும், மற்றெவ்வுருப்பின் சலனத்துக்கும், பிராணவாயுக்களே காரணமென்பதையும், முறையேஇந்திரியநிக்கிரகஞ்செய்து பிராணவாயுக்கள் புறம்நோக்காமல் உள்நோக்கும்படிசெய்து அவற்றின் சக்தியெல்லாம் அந்தராத்மாவாகிய ஈஸ்வரனதென்றறிவதே யுசிதமார்க்கமென்ப துணர்த்தப் படுகின்றது.

இவ்வாறான வழிகளைத்தவிர்த்து மந்திரகலை, தந்திரகலையெனச் சொல்லப்பட்டதுகளை அனுசரித்து விக்கிரகங்களைக்காட்டி அவ்விக்கிரகங்கள் பெயரைச்சொல்லி விதவிதமான உணவுப்பண்டங்களைச் சமைத்துவைத்துப் படைத்து உண்பதினுலும்யெக்கியசடங்குமுதலாகியதுகளால் கையைக்கொட்டி கையினல் முத்திரைகளைக்காட்டிகணக்காக வாயைமுணமுணென்று கணகணென்று மணியாட்டி கண்ணைமூடித்திரந்து கைகளிரண்டு மெய்யிலிட்டுக்கொள்வதினல் முக்திமோக்ஷத்துக்கிசைந்த ஞானவழி எற்படுமோ?

காவியிட்ட சீலைசெம்பொன் காட்டிப்
பொருள்பறிபபர் ஆவிதுணைக்காகாதவர்
எனசிவவாக்கிய மிருந்தாலும்.

தாடி சடைவளர்த்து தலையைமுண்டித்து தண்டகமண்டலமேந்தி தவவேடம்பூண்டுக்கொள்வதினால் தேகத்திற்குவரும் அனல், சீதம், இடி, தண்ணீர், வாய்வு, ஆயுதம், விஷம், மருந்து, பசி, தாகம், பிணிகாமமுனிவுயென்று சொல்லிய பதிரெண்டு உயிர்வேதனைகளும் வராமலிருக்குமென்று சொல்வதற்கு நாவெழும்புமோ?

அல்லது அந்தியகாலத்தில் பிராணன் அபானவழியாகச் செல்லும்போது மூணரைகோடிரோமத்திற்கு மூணரைகோடி தேள் கொட்டின அவஸ்தையைப் போல, கண்பஞ்சடைந்து, காதுகேளாமல், நாவெழாமல், ஐயந்துடர்ந்து அறிவழிந்து, பெருமூச்செறியும் பலதுன்பங்கள் தான் பரமதயாளுவாகிய வவ்வீஸ்வராதீனன் என்னுந் திரஞானத்தாலன்றி நீங்குமோ ?

தாய்மானவர்.

பத்திநெறிநிலைநின்று நவகண்டபூமி
பரப்பைவலமாகவந்தும்,
பரவையிடைமூழ்கி யுநதிகளிடைமூழ்கியும்
பசிதாகமின்றி யெழுநா,
மத்தியிடைநின்று முதிர்சருகுபுனல்வாயுவி
னை
வன்பசிதனக்கடைத்து,
மௌனத்திருந்துமுயிர் மலைநுழைவுபுக்கியு
மன்னுதச காடிமுற்றுஞ்,
சுத்திசெய்தும்மூல ப்ராணனோடங்கியைச்
சோமவட்டத்தடைத்துஞ்,
சொல்லறியவமுதுணடு மற்பவுடல்கற்பங்க
டோறு நிலைநிறகவீறு,
சித்திசெய்துஞ்ஞான மலதுகதிகூடுமோ
சித்தாந்தமுத்திமுதலே,
சிரகிரிவிளங்கவரு தக்ஷணாமூர்த்தியே
சின்மயாநந்தகுருவே.

யென்று சொல்லும் வாக்கியத்தைப் பொய்யென்றுசொல்வதற்கிடமுண்டோ.

ஞானமன்றி புளியிட்டசெம்பிற் குற்றம்நீங்காத விக்கிரகச்சிலைகளை பூசிக்கும்படியான விந்தைகளைக்காட்டினால் நாம் செய்துவந்தவினை நம்மைவிட்டொழியுமோ? அல்லது, விக்கிரகங்களினுச்சவாதிகாலங்களை அறிந்து முன்செய்த பாபத்தை ஒழிக்கும்படி பந்துஜென குடும்பசமேதராய் பிரவேசித்து பயபக்தியோடு உபவாசமிருந்து கூட்டங்கூடிய அசாலபேதமானது வாந்திபேதிநோயை விளைவித்து கும்பல்கும்பலாய் உயிரிழைக்கச்செய்வதுக்கமுற்று பெற்றோர்பிறந்தோர்மனைவிமக்கள்முதலிய அன்னியஜனங்களழுதுப் பிறளுவதைநீக்கி சந்தோஷத்தை அடையும்படி பிரேதத்தையெழுப்பி உழ்க்கார வைக்கும்படியான சக்தியவ்விகரசங்களுக்குண்டோ?

அல்லது அந்தவிக்கிரகத்தைக் கழுவினதீர்த்தமும் அதினிடத்தில் வைத்திருக்கும் திருத்துழாய் விபூதிமுதலிய அவமுரத்தியுவென்று சொல்லப்பட்ட வாந்திபேதிநோயை வரவொட்டாமல் தடுக்குமோ?

நாமொன்றுநினைக்க அது ஒன்றாய்முடியுஞ் சங்கதிகள் நன்றாய்தெரிந்திருந்தும், நம்மாற்செய்யப்பட்ட விக்கிரகம் நமக்கு மோக்ஷமளிக்குமென்கிற யெளிதத்தைநாமேயோசிக்கவேண்டுமல்லவா.

ஞானகுணமாலை.

குழைத்திடுவீர்மூன்றுங் கும்பிடுவீர்வம்பில்
சுழத்திடுவீர் முக்காலுஞ் சுத்திடுவீர் குளத்
தில்
தண்ணீரிரைப்பீர் தட்டுவீர் கையிரண்டும்
யெண்ணுவீர் விட்டோடுவீர்.
தண்ணிக்குட்பார்வை, தானிழந்து நின்றாப்
போல்
யெண்ணிக்கண்மூடியிருப்பதேன் தன்னி
லொளியோடிநின்றதுவு முண்மைசெய்தார்
பின்னும்
விழிமூடிநிற்பதுவுவீண்.
தேவாரமான சிவமதனில்பூசித்தா
லாவததாலென்னென்றறிகிலீர், கோயில்
சிலையறிந்து நாணறிந்து செங்கைகண்டு அ
ம்பினிலையறிந்து நிற்பதுவே, ௩.

தாயுமானவர்.

முன்னிலைச்சுட்டொழிநெஞ்சே நின்போத
முளைக்கிலையோ
பின்னிலைச்சன்மம் பிரக்குங்கண்டா
யிந்தபேய்த்தனமென்
றன்னிலையேநில்லுதானேதனி,
சச்சிதாநந்தமா
நன்னிலைவாய்க்குமெண் சித்தியுங்காணு
நமதல்லவே.

நமக்குள்ளிருந்து நிமிஷத்திற்கு நிமிஷமாறும் பலநிலைகளுக்கு ஆதாரமாய் நி

ற்கின்ற, ஓர்வத்துவை அறிவதற்கான வழிகளிது வென்றும் அதினுலுண்டாகும் பெருமைகளேயும், யெடுத்துக்காட்டவந்த வேதசமாஜத்தாரையும், அக்கருத்தின்வழிகளே விஞவிபேசும்படியான வர்களேயும், சில கனவான்கள் தூஷணை செய்பவர்களாயிருக்கின்றூர்கள். அப்படி தூஷணை செய்பவர்களுடைய கொள்கையை யோசித்தால், வெகுவிந்தையாயிருக்கின்றது. இவர்கள் ஞானமார்க்க மின்னதென் றறியாதவர்களல்ல; அறிந்திருந்தும், பெண் பிரசவகாலங்களிற் கொண்ட வைராக்கியத்தைப்போல் இவர்கள் ஞானம் க்ஷணகாலம் விளங்கி வழக்கமென்னுங் கொடிய காற்றுலடிப்பட்டு மறுங்கற நீங்குகின்றது. புராணம் படிக்கும்போது தித்தவயிராக்கியத்தை மற்றவேளேகளில் மரந்து பிரேதம் சுடுகாட்டிற்கு போனகாலங்களில் மயான வயிராக்கியத்துடன் புராணவயிராக்கியந் தொடர்ந்து ஒருவர்க்கொருவர் பழமொழி பாட்டுகளோடு ஞானமாற்கச் சொற்களே புகட்டப் புறப்படுங் கருத்தை நமதன்பர்களே யோசிக்கவேண்டும்.

ஐயா முகம் யெவ்வளவு பேதப்பட்டிருக்கிறதோ அவ்வளவு புத்திபேதமு முள்ள ஜெனங்களுடைய வினைமுன்னிலேச் சுட்டா யிருக்கின்றபோது கட்டவண்டி காரியமும் ரெயில்வண்டி பெருமைகளே பகுத்துப் பாக்கும்படியான சக்தி யுண்டோ? புலித்தோல் போர்வையோடு புல்லேமேயும் பசுவைப்போல் வெளிக்குவேடமாக ருத்திராக்ஷதாவடம் பூண்டுக்கொள்வதினுலென்ன பயன்கிடைக்கும்.

ஔவைக்குறள்.

முன்னேப்பிரப்பின் முயன்றதவத்தினுல்
பின்னேப்பெறுமுணர்வுதான், வேறு
சொன்னதினுல்வருவதுண்டெ விட்டகுறை
யெயதில்
சொல்லுமுன்னே அறிவோடு பத்திநிற்கும்.

எனச்சொல்லிய முன்னேர்கள் பெற்றபேறு, மற்றவர்களும்பெறும்படி சிவகாருண்ணியகர்த்தர்கள் முன்னமேயெடுத்துக்காட்டிய கருத்தை வேசதமாஜத்தார் யெடுத்துரைக்க வந்ததெல்லாம் சுடர் மங்குதலோடு யெரியுந்திரியை தூண்டுகோலிடுவதுபோல், தீவரம், தீவரதரம் யென்று சொல்லப்பட்ட பக்குவர்களுக்கேயன்றி எல்லாம் நுழைந்தது வால்மாத்திரம் நுழையவில்லே யென்பவர்கள்யென்னத்தைத் தெரிந்துக்கொள்ளப் போகிருகள்.

தஅசுசுவுறு
ஏப்புறல்மீ௰கவ
பெங்களூர் - கன்
டோன்மெண்டு

இப்படிக்கு.
ஊழியன்
ஆ-கிஷ்ணப்பமுதலியார்.
பண்டிதசாலே.

சந்தாதாரர் விளம்பரம்.

தத்துவபோதினிக்குக் கையொப்பஞ்செய்பவர்கள்அனுப்புந்தொகைச் சேர்ந்ததைக்குறித்து, உத்தரப் பிரத்தியுத்தரங்கள் வைத்துக்கொள்ள அனுகூலப்படவில்லே யாகையால், அந்தந்த மாதத்தில் வரும் கையொப்பங்களேக் குறித்து, மருமாதம் தத்துவபோதினியில் ஒரு அட்டவணைப் பிரசுரம் செய்யப்படும். கடந்த மாதத்தில் வந்த சந்தாதாரர்களுக்கு அட்டவணை வருமாறு.

சந்தாதாரர்களுடைய அட்டவணை.

	காப்பி.
சென்னை-முத்துசாமி முதலியார்.........	௧
,, தொரைசாமி முதலியார்...........	௧
,, ம-ஜெயராம்பிள்ளே.....................	௧
,, குருசாமி முதலியார்.................	௧
,, வரதராசுலுநாயுடு.....................	௧
,, வீராசாமி நாயுடு......	௧
,, சி-வரதராசுலு நாயுடு....	௧
,, பூ-கனகசபை முதலியார்..........	௧
,, கந்தசாமி முதலியார்................	௧
,, மாசிலாமணி முதலியார்	௧
,, தெய்வசிகாமணி பிள்ளே.	௧
திருப்பூர்-அடைக்கலம் பிள்ளே............	௧
கோயம்புத்தூர்-வ-கோவிந்தராவ்........	௧
,, கொ-கிருஷ்ணையர்.................	௧
,, அய்யுலுநாயக்கர்.........	௧
,, திருமலே அய்யர்........................	௧
,, காசி விசுவநாத முதலியார்... ...	௧
,, லக்ஷ்மி நரசிம்மய்யங்கார்.........	௧

	காப்பி.
,, கிருஷ்ணசாமி அய்யர்.............	க
,, டேவிட்....................................	க
சங்ககிரிதுர்க்கம்-சொக்கலிங்கம்பிள்ளை.	க
தஞ்சை-மார்கோசிஸ்.........	க
,, ஸ்ரீனிவாசஅய்யங்கார்...............	க
,, இராமசாமிபிள்ளை.....................	க
,, இராமசந்திர அருணசல வணங்காமுடிபண்டாரத்தர்.....................	க
,, சிதம்பரபிள்ளை...............	க
,, குருசாமிமுதலியார்...	க
,, பாலையாபிள்ளை...............	க
,, அருணகிரிமுதலியார்...............	க
,, அய்யாசாமி சாஸ்திரியார்...	க
,, வெங்கிடாசலமுதலியார்...... ...	க
,, கிருஷ்ணசாமிநாயுடு.......	க
,, இராமசேஷஅய்யர்...............	க
,, ஸ்ரீனிவாசஅய்யங்கார்............ ...	க
,, விசுவலிங்கமுதலியார்...............	க
,, சாமிசாஸ்திரியார்..........	க
,, பிநாகபாணிமுதலியார்......	க
,, இராஜகோபாலநாயுடு...	க
,, நாராயணசாஸ்திரி..................	க
,, வெங்கிடராமன்........................	க
,, இரகுநாதன்................... ...	க
,, சுப்பராயபிள்ளை.........	க
,, கிருஷ்ணசாமி........................	க
நாகபட்டணம்-வைதியலிங்கம்பிள்ளை ...	க
சவுத்ஆர்காடு-கோபாலசாமிஅய்யர்......	க
திருவாதி-சாமாவையர்.....................	க
கூலூர்-கிருஷ்ணஅய்யர்......	க

	காப்பி.
,, கிருஷ்ணஅய்யர்................. ...	க
,, தில்லைநாயகம்பிள்ளை.....	க
,, கனகசபைமுதலியார்......	க
,, தொரைசாமிநாயக்கர்...	க
,, இராமசந்திரநாயக்கர்......	க
,, முத்துசாமிமுதலியார்............	க௦
ஒசூர்-சுப்பையர்.............................	க
கர்னூல்-வடமலைமுதலியார்...............	க
சிங்கபூர்-வே-நாராயணசாமிநாயக்கர்....	க
,, பே-சுப்பராயப்பிள்ளை..............	க
,, கிருஷ்ணசாமி ஓவர்சீர்......... ...	க
கிருஷ்ணகிரி-சுப்பராயசெட்டியார்......	க
,, சுப்பராயலுநாயக்கர்...............	க
,, நாராயணராவ்................... ...	க
,, வெங்கிடாசலமுதலியார்...	க
பெங்களூர்-கிருஷ்ணசாமிமுதலியார்....	க
,, வெங்கிடாசலமுதலியார்............	க
,, யேகாம்பரம் முதலியார்...	க
,, துர்கையர்..........................	க
,, மதுரைபிள்ளை............	க
,, நாகலிங்கமுதலியார்...............	க
,, இராமசாமிமுதலியார்......... ...	க
பல்லாரி-ப-குருசாமிபிள்ளை...............	க
மன்னார்குடி-மாணிக்கம்பிள்ளை............	க
கும்பகோணம் - இராமலிங்கதம்பிரான்	க
,, சிவகுருபிள்ளை...............	க
,, சேஷையர்............................	க
ஆர்காடு-பாலகிருஷ்ணமுதலியார்........	க
,, ஆ-பொன்னரங்கமுதலியார்.......	க
கண்டி-முனிசாமிநாயுடு.....................	க

சேலம்வேதசமாஜ விண்ணப்பம்.

சகலசமயத்தாரும், அபேதமாக, அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகராகிய பேராநந்தப் பெருங்கடவுளைத் தமதிஷ்டபூர்வகமாகத் தொழுதற்கிடமாயொருதிருமாளிகை சுமார் மூவ்வாயிரம் ரூபாய் பொறுமான பெருங்கட்டடமாகச் சமைக்க எத்தனப்பட்டிருப்பதால், அந்தத்தருமகாரியம் நிறைவேறும்படி அவரவர்க்கிசைந்த சந்தாவைக்கொடுத்து உதவிசெய்வார்களென, அதிவினயத்தோடு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

சந்தாபணம் சேலத்தில் -அஜூர்-கஜான்சி - ம-ா-ா-ஸ்ரீ - அண்ணாசாமிமுதலியாரிடம் அனுப்பலாம்.

வெளிப்பிரதேசங்களிலுள்ள கனவான்கள் தயவுசெய்து தங்கள் சந்தாவுடன் தமதிஷ்டர்களுடைய சந்தாவையுங் கூடியசீக்கிரத்தில் வசூல்செய்து, சந்தாபட்டியுடன், ஷெபணத்தை, பாங்கிநோட்டாயாவது, உண்டியாயாவது, அல்லது பத்துரூபாயிக்குக் குறைந்ததாயின், அரைஅணா லேபிலாயாவது தபாலில் ரிஜஸ்டர்செய்து மேற்கண்டவர்பேருக்கு அனுப்பும்படி கேட்டுக்

கொள்ளப் படுகின்றது. தபால் முதலிய கூலி சந்தாவில் தள்ளிக்கொள்ளலாம்.

கஅசாசா௵ ஜனவரிமீ௳ சேலம்.

இங்ஙனம்,
பா. சுப்பராயலு செட்டி,
காரியதரிசி.

புனர்விவாஹ விளம்பரம்.

க. சென்னைப்பட்டணம் நிவாசியாகிய ஸ்மார்த்தபிராமணன், சுமார் முப்பதுவயது, சர்க்கார் உத்தியோகஜீவனம், ஸ்மார்த்தபிராமணர்களில் பிரவிடையாகாத முன் பதிவியோகமடைந்த பாலிகையை சாஸ்திர சம்மந்தமான புனர்விவாகஞ்செய்துக்கொள்ள விரும்புகிறூர்.

உ. கூடலூர் நிவாசியாகிய சுமார் இருபத்துநாலுவயது, சர்க்கார் உத்தியோகஜீவனமுள்ள ஒரு ஸ்மார்த்தபிராமணர்களில் பிரவிடையாகாத முன் பதிவியோகமடைந்த பாலிகையை சாஸ்திரசம்மந்தமான புனர்விவாகஞ் செய்துக்கொள்ள விரும்புகிறூர்.

மேற்கண்டபடி பதிவியோகமடைந்த புத்திரிகளையுடையவர்கள் இஷ்டமிருந்தால் மற்றசங்கதிகளைத் தத்துவபோதினி அச்சுக்கூடத்தில் தெரிந்துகொள்ளலாம்.

ஆண்டுநிறைவு.

இராகம்சுருட்டி, தாளம்ரூபகம்.

க. ஆகியந்தமற்றநாதனேயுனக்கு - மங்களம் - சுப - மங்களம்,
சோதிரூபமானவாதித்தன்முதலோர்க்கு - மங்களம் - ஜய - மங்களம்.

உ, அலகிலாதஉலகங்களத்தனைக்கும் - மங்களம் - சுப - மங்களம்,
தலமைபெற்றயெங்களுலகமீதனுக்கும் - மங்களம் - ஜய - மங்களம்.

ங. பாரிலுள்ளபலதேசமெவற்றிற்கும் - மங்களம் - சுப - மங்சளம்,
வாரிசூழ்ந்தயிந்துதேசமெங்கள்தாய்க்கு - மங்களம் - ஜய - மங்களம்.

ச. இந்துதேசமாளுகின்ற ராக்கினுக்கு - மங்களம் - சுப - மங்களம்,
இந்தநாட்டிலெங்குமுள்ளசோதரர்க்கு - மங்களம் - ஜய - மங்களம்.

ரு. வேதசாரமான நீதிசாரங்கட்கு - மங்களம் - சுப - மங்களம்,
நிதிநாடும்வேதசமாஜத்தாருக்கு - மங்களம் - ஜய - மங்களம்.

சா. சத்தியமாகும் பலதத்துவங்களுக்கு - மங்களம் - சுப - மங்களம்,
தத்துவங்கள்செப்புபத்ரமீதனுக்கு - மங்களம் - ஜய - மங்களம்.

எ. அந்தமற்றகாலபேதமனைத்திற்கு - மங்களம் - சுப - மங்களம்,
எந்தையாசிதன்னுல சென்றவாண்டினுக்கு - மங்களம் - ஜய - மங்களம்.

தனியான, ஒப்பற்ற, மெய்யறிவநந்த பிரும்மம், சாந்திபூர்ணம், அமிருதம், அதுஉருவும்குற்றமுமற்றது. இதையறிந்தவர் அமிருதராவார்; மற்றவர் துக்கமேயடைவார்.
மெய்யேவெல்லும், பொய்யல்ல.

சென்னப்பட்டணம்,—தத்துவபோதினி அச்சுக்கூடத்தில், கா. தெய்வசிகாமணி முதலியாரால் பதிப்பிக்கப்பட்டது.